# 4

# விலைகள், கூலிகள், தொழில்நிலை மற்றும் உற்பத்தித்திறன்

## 4.1 பொதுநோக்கு

**பணவீக்கம் 2013இல் தொடர்ச்சியாக ஐந்தாவது ஆண்டாக தனி இலக்க மட்டத்தில் விளங்கியதுடன் இவ்வாண்டில் மேலும் வீழ்ச்சியடைந்து 2013 திசெம்பரில் அநுகூலமான நடு ஒற்றை இலக்க மட்டத்தை அடைந்தது.** இது கடந்த நான்கு தசாப்த காலப்பகுதியில் பணவீக்கம் ஒற்றை இலக்க மட்டத்தில் தொடர்ந்து விளங்கிய நீண்ட காலப்பகுதியாகும். கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் (கொநுவிசு) (2006/07 = 100) அளவிடப்படும் ஆண்டுச் சராசரி முதன்மைப் பணவீக்கம் இவ்வாண்டின் முதல் சில மாதங்களில் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்து விளங்கிய போதிலும் 2013 யூனிலிருந்து வீழ்ச்சியடைந்து 2013 திசெம்பரில் 6.9 சதவீதத்தை அடைந்தது. உள்நாட்டு வேளாண்மைப் பண்டங்களின் வழங்கல் நிலைமைகளிலான மேம்பாடுகள், பன்னாட்டுச் சந்தையில் சில பண்டங்களின் விலைகள் குறைவடைந்தமை மற்றும் மத்திய வங்கியின் முன்மதியான கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளின் காரணமாக ஆண்டுக்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமும் 2013 மாச்சிலிருந்து வீழ்ச்சியடையும் பாதையில் நகர்ந்தது. எனினும், இது உற்பத்தி செய்யப்படும் முக்கிய பிரதேசங்களில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகளால் ஏற்பட்ட நிரம்பலிலான தடைகள், வாயு மற்றும் எரிபொருள் விலைகளிலான அதிகரிப்பு மற்றும் 2012 இலான குறைந்த தளம் என்பனவற்றின் காரணமாக இவ்வாண்டின் முதலிரு மாதங்களில் மேல்மட்ட ஒற்றை இலக்க மட்டங்களை அடைந்தது. 2013 ஏப்பிறலிலிருந்து நடைமுறைக்கு வந்த மின்கட்டணத்தின் மேல் நோக்கிய சீராக்கம் மற்றும் பல உணவுப் பொருட்களின் இறக்குமதித் தீர்வையின் மேல் நோக்கிய திருத்தங்கள் இவ்வாண்டில் பணவீக்கம் மீது ஓரளவு தாக்கத்தைக் கொண்டிருந்தன. இதேவேளை, பொருளாதாரத்தில் பணவீக்கத்தில் நீண்டகாலப் போக்கினை அடிப்படையில் பிரதிபலிக்கும் மையப் பணவீக்கம் 2013 யூனிலிருந்து ஆண்டுச் சராசரி அடிப்படையில் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. ஆண்டுக்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2013 மாச்சிலிருந்து தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்லும் பாதையில் நகர்ந்து 2013 திசெம்பரில் 2.1 சதவீதத்தை அடைந்தது. 2007இல் இது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த மட்டமாக விளங்கி கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளின் பயனுறுதித்தன்மையினை குறித்துக்காட்டுகின்றது.

**2013இல் அரச துறை மற்றும் தனியார் துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் முறைசாரா தனியார் துறை பெற்றுக்கொண்ட ஆகக் கூடிய அதிகரிப்புடன் அதிகரித்தன.** அரச துறை ஊழியர்களின் (மத்திய அரசாங்க நிறைவேற்றுத்தரமல்லா அலுவலர்கள், சிற்றூழியர்கள் மற்றும் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்கள்) பெயரளவுக் கூலிகளிலான அதிகரிப்பு 2013 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு 2013 சனவரியிலிருந்து இவ்வூழியர்களுக்குச் செலுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படியின் மேல் நோக்கிய திருத்தம் மற்றும்

ஒய்வூதியத்துக்குட்படாத படி காரணமாக ஏற்பட்டது. கூலி நிர்ணயச் சபை வர்த்தகத்தின் ஒழுங்குவிதிகளால் கூலிகள் ஆளுகைக்குட்படுத்தப்படும் ஊழியர்களின் ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண்களால் அளவிடப்படும் முறைசார் தனியார் துறையின் பொதுவான பெயரளவு கூலிவீதச் சுட்டெண் 2013இல் 5.7 சதவீதத்தால் அதிகரித்தது. 2013இல் இவ்வதிகரிப்பு முழுமையாக கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை, மற்றும் பணிகள் துறையிலுள்ள தொழிலாளர்களின் ஆகக் குறைந்த கூலிகளில் முறையே 32.9 சதவீதம் மற்றும் 21.0 சதவீதம் கொண்ட கூர்மையான மேல் நோக்கிய திருத்தத்தால் ஏற்பட்டது. அதேவேளை, 2013இல் முறைசாரா தனியார் துறையிலுள்ள ஊழியர்கள் 3.1 சதவீத மெய்க்கூலி அதிகரிப்பை அனுபவித்தனர். முறைசார் தனியார் துறையினரிடையே கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறை மற்றும் பணிகள் துறை மெய்க்கூலிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. எனினும், ஒட்டுமொத்தச் சுட்டெண்ணில் ஆகக் கூடிய நிறையைக் கொண்டிருக்கும் வேளாண்மைத் துறையிலுள்ள ஊழியர்கள் 2013இல் அவர்களது மெய்க்கூலிகளில் மிதமான வீழ்ச்சியால் பாதிப்படைந்தனர். இதன் விளைவாக, முறைசார் தனியார் துறையில் ஒட்டுமொத்த மெய்க்கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013இல் 1.2 சதவீதத்தால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தன. குறைந்த பணவீக்கச் சூழலானது பெயரளவுக் கூலிகளில் அதிக அதிகரிப்பின்றி மெய்க்கூலிகளில் உறுதித்தன்மையப் பேண உதவின. இது கூலிப் பணவீக்கப் பரவலைத் தடுப்பதுடன் பொருளாதாரத்தின் போட்டித்தன்மையைப் பேணும் ஒரு சாதகமான அபிவிருத்தியாகும்.

**தொழிற்படை பங்கேற்பு வீதம் கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கை நேர்மாறாக்கி 2013இல் அதிகரித்து தொழிற்சந்தையின் பயனுறுதியான தொழிற்பாட்டைப் பிரதிபலித்தது.** தொழிற்படை பங்கேற்பு வீதத்திலான அதிகரிப்புக்கு பெரும்பாலும் தொழிற்படைக்கு கிராமியத் துறைப் பெண்கள் நுழைந்தமையே முக்கிய காரணமாகும். தொழிற்சந்தைக்கு புதிய தொழில்புரிவோரின் நுழைவு காரணமாக தொழிலின்மை வீதம் 2012இன் 4.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 4.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2012இல் உள்ளவாறே, மொத்த தொழில்நிலையில் பெரும்பங்கினைத் தனியார் துறை கொண்டிருந்ததுடன் அதனைத் தொடர்ந்து சுயதொழில்புரிவோரும் அரச துறையும் விளங்கின. இவ்வாண்டில் அனுபவிக்கப்பட்ட உயர் வளர்ச்சி வீதத்தால் உதவப்பட்ட பணிகள் மற்றும் கைத்தொழில் துறைகள் மொத்த தொழில்நிலைக்கு கூடியளவில் பங்களிப்புச் செய்தன. வேளாண்மைத் துறையில் தொழில்புரிந்தோரின் பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சி இத்துறையில் ஏற்பட்ட தொழிலாளர் உற்பத்தித்திறனுக்கு வழிவகுத்த ஆரோக்கியமான அபிவிருத்தியால் ஏற்பட்டது. பணிகள் துறையிலான வெளியீடு 2013இல் அதிகரித்த போதிலும் இத்துறைக்கு புதிய ஊழியர்கள் நுழைந்ததன் காரணமாக தொழிலாளர் உற்பத்தித்திறன் வீழ்ச்சியடைந்தது. ஒட்டுமொத்த பொருளாதாரத்தில் தொழிலாளர் உற்பத்தித்திறனில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு கைத்தொழில் துறை முக்கிய பங்களிப்பு காரணியாக விளங்கியது.

**வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான வெளிச்செல்கைகள் தொடர்ந்தும் அதிகரித்து தொழிலின்மை மீதான அழுத்தத்தைக் குறைத்ததுடன் நாட்டுக்கான வெளிநாட்டுச் செலாவணியின் உட்பாய்ச்சல்களை விரிவாக்கியது.** வீட்டுப் பணிப்பெண்களின் வெளிச்செல்கைகளில் இவ்வாண்டில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி அவதானிக்கப்பட்டு வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கும் நோக்கத்துக்காக வீட்டுப் பணிப்பெண்கள் மீது தங்கியிருப்பதைக் குறைப்பதற்கு அதிகாரிகளால் எடுக்கப்பட்ட வழிமுறைகளின் பயனுறுதியைப் பிரதிபலித்தது. குறிப்பாக தொழில்சார் நிபுணர்கள், மத்திய தர மற்றும் எழுதுவினைஞர்கள் உள்ளிட்ட உயர் தேர்ச்சியுடைய வகைகளின் கீழான அதிகரித்த வெளிச்செல்கைகள் பணியாளர் ஒருவருக்கான வெளிநாட்டுச் செலாவணியின் உயர்மட்டத்தை வழங்குகையில் நாட்டுக்கு அறிவு மற்றும் தொழில்நுட்ப மாற்றல் வசதிகளுக்கான புதிய வழிமுறைகளைத் திறந்தது. வெளிநாட்டுத் தொழில்நிலையில் அவதானிக்கப்பட்ட இவ்வபிவிருத்திகள் குறிப்பாக நீண்ட காலத்தில் சமூக நன்மைகள் மற்றும் பொருளாதார நன்மைகளின் நியதிகளில் நாட்டுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.


## 4.2. விலைகள்

### விலை அசைவுகளும் பங்களிப்புக் காரணிகளும்

### கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு)

**நுகர்வோர் விலைப் பணவீக்கம் 2013இல் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கை விவரித்தது.** இலங்கையில் நுகர்வோர் விலைகளில் அசைவுகளை அளவிடும் அலுவல்சார் சுட்டெண்ணான கொ.நு.வி. சுட்டெண் (2006/07=100), 2012 திசெம்பரிலான 168.6 இலிருந்து 2013 திசெம்பரில் 176.5 இற்கு அதிகரித்து 2013 திசெம்பரில் 4.7 சதவீதம் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கத்தைப் பிரதிபலித்தது. இது 2012 திசெம்பரின் 9.2 சதவீதத்திலிருந்தான கூர்மையான

**வரைபடம் 4.1 கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2006/07=100)**




வீழ்ச்சியாகும். ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம் கிட்டத்தட்ட தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகளுக்கு ஒற்றை இலக்க மட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்டது. இது 1977இல் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதன் பின்னர் ஒற்றை மட்ட இலக்க பணவீக்கம் பதிவு செய்யப்பட்ட நீண்ட காலப் பகுதியாகும். எனினும், இவ்வாண்டின் முற்பகுதியில் உணவு நிரம்பலுக்கு தடையேற்படுத்திய பாதகமான வானிலை நிலைமைகள், 2013 சனவரி மற்றும் பெப்புருவரியில் பணவீக்கத்தை 9.8 சதவீதம் கொண்ட உயர்ந்த அளவுக்குத் தள்ளியது. சந்தைக்கு பருவகால அறுவடை விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து விலைகள் படிப்படியாக வீழ்ச்சியடைந்ததுடன் ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம் 2013 திசெம்பரில் இவ்வாண்டுக்கான ஆகக் குறைந்த மட்டத்தைப் பதிவு செய்தது. இதே போக்கை எடுத்துக்காட்டி, ஆண்டுச் சராசரிப் பணவீக்கமும் 2012 இறுதியிலான 7.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013 இறுதியில் 6.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இச்சாதகமான அபிவிருத்தி முன்னேற்றமடைந்த உள்நாட்டு நிரம்பல் நிலைமைகள், பன்னாட்டுப் பொருட்களின் விலைகளின் மெதுவடைவு மற்றும் முன்மதியான நாணயக் கொள்கை என்பவற்றின் இணைந்த வெளிப்பாடாகும்.

**உணவல்லா வகையிலான பணவீக்க வீழ்ச்சியானது கொ.நு.வி சுட்டெண்ணில் 41.0 சதவீத நிறையைக் கொண்டிருக்கும் உணவு வகையிலான அதிகரிப்பை விட கூடியதாக விளங்கியது.** இதன்படி, உணவல்லா வகை 2013இல் பணவீக்கத்திலான வீழ்ச்சியை நோக்கிய பிரதான பங்களிப்புக் காரணியாக விளங்கியது. 2013இல் உணவல்லா வகை 2012இன் 70.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் கொநுவி சுட்டெண்ணிலான ஆண்டுச் சராசரி மாற்றத்துக்கு 48.0 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது. இதன் விளைவாக, ஆண்டுச் சராசரி உணவல்லாப் பணவீக்கம் 2012இன் 10.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 6.1 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.

**கொ.நு.வி சுட்டெண்ணின் ஒட்டுமொத்த நிறையில் 12.3 சதவீதத்துக்கு வகைகூறும் போக்குவரத்து துணைச் சுட்டெண் ஆண்டுச் சராசரி அடிப்படையில் 2012 உடன் ஒப்பிடுகையில் 2013இல் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவு செய்தது.** இவ்வாண்டு எரிபொருள் விலைகள் மற்றும் பேருந்துக் கட்டணங்களில் மேற்கொள்ளப்பட்ட அதிகரிப்பு சிறு அளவில் இருந்ததன் காரணமாக போக்குவரத்து துணைச் சுட்டெண் 2012இன் 21.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 4.6 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது.

**மின்கட்டணத் தீர்வைகளின் மேல் நோக்கிய திருத்தத்தால் ஏற்படுத்தப்பட்ட அழுத்தம் இவ்வாண்டில் முகாமைப்படுத்தப்பட்டது.** 2013 ஏப்பிறலில் மின்வலுத் தீர்வையின் மேல் நோக்கிய திருத்தம் கொ.நு.வி சுட்டெண் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் அழுத்தத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவாக, வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள் துணைச் சுட்டெண் 2012இன் 24.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டுச் சராசரி அடிப்படையில் ஒட்டுமொத்த கொ.நு.வி சுட்டெண்ணுக்கு 30.8 சதவீத அதிகரிப்பைப் பங்களிப்புச் செய்தது. 2013இல் இத்துணைச் சுட்டெண் பணவீக்கத்திலான அதிகரிப்புக்கு உணவல்லா வகை பிரதான பங்களிப்புக் காரணியாகும். இவ்விலை அதிகரிப்பின் மறைமுகமான தாக்கம் தயாரிக்கப்பட்ட உணவு துணைத்

**அட்டவணை 4.1 விலைச் சுட்டெண்களில் ஏற்பட்ட மாற்றங்கள்**

| சுட்டெண் | சுட்டெண் (ஆண்டு இறுதி) | | ஆண்டுக்காண்டு சதவீதமாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 (அ) | திசெ 2012/ திசெ 2011 | திசெ 2013/ திசெ. 2012 (அ) | 2012/2011 | 2013/2012 (அ) |
| கொ.நு.வி.சு (2006/07=100) | 168.6 | 176.5 | 9.2 | 4.7 | 7.6 | 6.9 |
| மொ.உ.உ சுருக்கி (2002=100) | 248.9 (ஆ) | 265.6 | - | - | 8.9 | 6.7 |

(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**அட்டவணை 4.2 ஆண்டுச் சராசரி பணவீக்கத்திற்கான பங்களிப்பு - உட்பிரிவின்படி (அ)**

| சுட்டெண் | 2012 சதவீதம் | | 2013 சதவீதம் | |
|---|---|---|---|---|
| | மாற்றம் | பங்களிப்பு | மாற்றம் | பங்களிப்பு |
| கொ.நு.வி.சு. (எல்லாப் பொருட்கள்) | 7.6 | 100.0 | 6.9 | 100.0 |
| உணவு மற்றும் வெறியமற்ற குடிபானங்கள் | 4.7 | 29.3 | 7.9 | 52.0 |
| உணவற்றவை | 10.0 | 70.7 | 6.1 | 48.0 |
| உடைகள் மற்றும் காலணி | 9.8 | 4.0 | 5.4 | 2.4 |
| குடியிருப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள் | 9.6 | 24.9 | 10.7 | 30.8 |
| தளபாடம், வீட்டுப்பாவனை பொருள் மற்றும் வழமையான வீடு பேணல் | 6.7 | 2.8 | 4.0 | 1.8 |
| நலன் | 3.0 | 2.0 | 1.7 | 1.2 |
| போக்குவரத்து | 21.6 | 34.7 | 4.6 | 9.1 |
| தொடர்பூட்டல் | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் | 4.0 | 0.7 | 4.1 | 0.8 |
| கல்வி | 0.5 | 0.2 | 0.9 | 0.5 |
| பல்வகை பொருட்கள் மற்றும் சேவைகள் | 4.1 | 1.3 | 4.2 | 1.5 |

(அ) கொ.நு.வி.சு. (2006/07=100) இன் அடிப்படையில்

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

தொகுதி, பொழுதுபோக்கு மற்றும் கலாச்சார துணைச் சுட்டெண் மீதான செலவினத்தின் அதிகரிப்பில் பெரும்பாலும் பிரதிபலிக்கப்பட்டது.

**பணவீக்கம் மீது திரவப் பெற்றோலிய வாயு மற்றும் எரிபொருள் விலையின் மீளாய்வுகளின் தாக்கம் 2012 இனைக் காட்டிலும் விடக் குறைவாக விளங்கியது.** லிட்றோ மற்றும் லாப் ஆகிய எல்பி வாயு இரண்டினதும் 12.5 கி.கி சிலிண்டரின் விலை 2013 சனவரியில் ரூ.150ஆல் அதிகரிக்கப்பட்டது. மசகெண்ணெயின் இறக்குமதி விலை தொடர்ந்து அதிகரித்து காணப்பட்டமை மற்றும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் திரண்ட இழப்புக்கள் என்பன 2013இல் பெற்றோல் மற்றும் டீசலின் விலைகளை முறையே ரூ. 3 மற்றும் ரூ. 6 ஆல் மேல் நோக்கித் திருத்துவதற்குத் தேவைப்படுத்தியது. இது இவற்றின் சராசரி விலையை முறையே 1.9 சதவீதத்தாலும் 5.2 சதவீதத்தாலும் அதிகரிக்கச் செய்தது. எனினும், 2013இல் பெற்றோல் மற்றும் டீசலின் சராசரி விலையதிகரிப்பு 2012இலான 6.7 சதவீதம் மற்றும் 36.9 சதவீத அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவானதாகும்.

**ஏனைய உணவல்லா வகைகள் பலவற்றின் பணவீக்க வீழ்ச்சி 2013இல் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குச் சாதகமாக பங்களிப்புச் செய்தது.** ஆடை மற்றும் பாதணி, தளபாடம், வீட்டுப் பாவனைப்பொருள் மற்றும் வழமையான வீடு பேணல்; மற்றும் நலத் துறை ஆகிய துணைச் சுட்டெண்களின் விலைகளிலான அதிகரிப்பு வீதம் வீழ்ச்சியடைந்து இவ்வாண்டில் பொதுவான பணவீக்க வீதத்திலான மெதுவடைவுக்குப் பங்களிப்புச் செய்தது. முன்னைய ஆண்டைப் போலவே, தொடர்பாடல் துணைச் சுட்டெண்ணிலான பொருட்களின் விலைகள் ஒட்டுமொத்தமாக 2013இலும் தொடர்ந்து மாற்றமின்றி விளங்கியது.

**உணவு வகையிலான விலை அதிகரிப்புக்கள் 2013இல் பணவீக்கத்திலான ஒட்டுமொத்த அதிகரிப்புக்குப் பெருமளவில் பங்களிப்புச் செய்தன.** உணவு மற்றும் வெறியமல்லா பானங்களின் துணைச் சுட்டெண் 2012இன் 4.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2013இல் 7.9 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு 2012இன் 29.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் ஒட்டுமொத்த கொ.நு.வி சுட்டெண்ணிலான அதிகரிப்புக்கு 52.0 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தது. உணவு வகையினுள், அரிசி, மரக்கறிகள், பழங்கள், இறைச்சி, தேங்காய் மற்றும் சமையல் எண்ணெயின் சராசரி விலை 2013இல் ஒப்பீட்டு ரீதியில் உயர் வீதத்தில் அதிகரித்தது. இவ்விலை அதிகரிப்புக்கள் பாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக உள்நாட்டு நிரம்பலிலான தடையால் 2013இன் முதலரைப் பகுதியில் கூடியளவுக்கு முக்கியமாக விளங்கின. இதன் விளைவாக, ஆண்டுச் சராசரி உணவுப் பணவீக்கம் சனவரியிலான 5.7 சதவீதத்திலிருந்து மேயில் 9.7 சதவீதம் கொண்ட உச்சநிலையை அடைந்து 2013 யூனில் அதே மட்டத்தில் தொடர்ந்து விளங்கியது. உணவுப் பணவீக்கம் இவ்வாண்டின் பிற்பகுதியில் மெதுவடைந்து 2013 திசெம்பரில் 7.9 சதவீதத்தை அடைந்தது. இதற்கு மாறாக, 2012 உடன் ஒப்பிடுகையில் 2013இல் உடன் மீன் மற்றும் கடலுணவு, பால்மா மற்றும் சீனியின் விலைகள் குறைந்த வீதத்தில் அதிகரித்து பணவீக்கத்தின் மேல் நோக்கிய அழுத்தத்தைத் தணித்தது.

**2012 உடன் ஒப்பிடுகையில் 2013இல் அரிசியின் சராசரி விலை தொடர்ந்து உயர்வாகக் காணப்பட்டது.** நிரம்பல் பற்றாக்குறைகள் மற்றும் 2012 சிறுபோகத்தில் நிலவிய மோசமான வானிலை காரணமாக ஏற்பட்ட வரலாற்று ரீதியான குறைந்த நெல் அறுவடை காரணமாக அரிசி விலை

**அட்டவணை 4.3** **இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட முக்கிய பொருட்களின் சில்லறை விலைகள்**

| விடயம் | | அலகு | கொநுவிசு (2006/07=100) நிறை % | விலை - ரூபா | | | | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆண்டுச் சராசரி | | | திசெ. 2011 | திசெ. 2012 | திசெ. 2013 | ஆண்டுச் சராசரி | | ஆண்டுக்காண்டு | |
| | | | | 2011 | 2012 | 2013 | | | | 2012/ 2011 | 2013/ 2012 | திசெ.2012/ திசெ.2011 | திசெ.2013/ திசெ.2012 |
| உள்நாட்டு | அரிசி - சம்பா | 1கி.கி | 1.96 | 68.38 | 70.15 | 72.29 | 68.19 | 74.06 | 72.21 | 2.6 | 3.1 | 8.6 | -2.5 |
| | அரிசி - பச்சை (சிவப்பு) | 1கி.கி | 0.85 | 57.27 | 57.08 | 59.87 | 56.80 | 60.58 | 60.78 | -0.3 | 4.9 | 6.7 | 0.3 |
| | அரிசி - பச்சை (வெள்ளை) | 1கி.கி | 0.60 | 56.58 | 56.26 | 59.28 | 56.33 | 60.46 | 60.44 | -0.6 | 5.4 | 7.3 | 0.0 |
| | அரிசி - நாடு | 1கி.கி | 0.35 | 59.25 | 59.67 | 61.59 | 58.95 | 62.73 | 63.31 | 0.7 | 3.2 | 6.4 | 0.9 |
| | தேங்காய் (நடுத்தரம்) | காய் | 1.84 | 41.01 | 34.76 | 43.44 | 33.78 | 38.22 | 47.64 | -15.2 | 25.0 | 13.1 | 24.7 |
| | மீன் - கெலவல்ல | 1கி.கி | 1.11 | 632.32 | 694.14 | 697.33 | 652.30 | 718.18 | 694.60 | 9.8 | 0.5 | 10.1 | -3.3 |
| | அவரை | 1கி.கி | 0.43 | 167.34 | 157.60 | 166.00 | 175.07 | 160.65 | 166.16 | -5.8 | 5.3 | -8.2 | 3.4 |
| | கத்தரி | 1கி.கி | 0.19 | 90.84 | 99.25 | 107.73 | 87.31 | 113.28 | 92.58 | 9.3 | 8.5 | 29.7 | -18.3 |
| | முட்டை | ஒவ்வொன்றும் | 0.37 | 11.64 | 11.29 | 14.06 | 9.67 | 14.49 | 14.12 | -3.0 | 24.5 | 49.8 | -2.5 |
| இறக்குமதிகள் | சீனி | 1கி.கி | 1.12 | 96.11 | 101.04 | 100.95 | 92.91 | 105.50 | 102.41 | 5.1 | -0.1 | 13.6 | -2.9 |
| | பால்மா - அங்கர் | 400கி | 3.21 | 255.92 | 302.35 | 325.00 | 264.00 | 325.00 | 325.00 | 18.1 | 7.5 | 23.1 | 0.0 |
| | சிவப்பு - பருப்பு | 1கி.கி | 0.73 | 149.20 | 145.07 | 156.34 | 131.95 | 146.18 | 157.05 | -2.8 | 7.8 | 10.8 | 7.4 |
| | கோதுமை மா | 1கி.கி | 0.20 | 83.92 | 90.92 | 98.13 | 84.07 | 98.46 | 97.93 | 8.3 | 7.9 | 17.1 | -0.5 |

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

2013இன் ஆரம்பக் காலப்பகுதியில் உயர் மட்டங்களில் தொடர்ந்து விளங்கியது. 2013 பிற்பகுதியில், பெரும்போக அறுவடையின் ஓரளவு கிடைப்பனவு மற்றும் 2013இலான தாராளமான சிறுபோக அறுவடையுடன் படிப்படியான விலை வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. எனினும், இச்சாதகமான விலை அபிவிருத்திகள் 2012இல் தொடர்ந்து காணப்பட்ட குறைந்த சராசரி விலையின் தள விளைவை விஞ்சுவதற்குப் போதுமானதாக இருக்கவில்லை. இருந்தபோதிலும், 2013இல் ஒட்டுமொத்த விலை அதிகரிப்பின் வீதத்தை மிதமாக்குவதற்கு இது போதுமானதாகும். அரிசியின் உயர் விலை, 2013இற்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின்படி அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் உத்தரவாத விலையிலான அதிகரிப்பால் மேலும் உதவப்பட்டது.

**மரக்கறிகளின் சராசரி விலை இவ்வாண்டின் பிற்பகுதியை நோக்கி படிப்படியாக குறைவடைந்த போதிலும் 2012 உடன் ஒப்பிடுகையில் 2013இல் விரைந்த வீதத்தில் அதிகரித்தது.** பலத்த மழை மற்றும் வெள்ளம் காரணமாக பெரும்போகம் ஆரம்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக விலை அதிகரிப்பு 2013இன் முதல் சில மாதங்களில் கூர்மையாக விளங்கியது. எனினும், சந்தைக்கு சிறுபோக அறுவடை வெளிவந்ததும் மரக்கறி விலைகள் மீதான மேல் நோக்கிய அழுத்தம் 2012இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் படிப்படியாக குறைவடைந்தது. இவ்விலை வீழ்ச்சிகள் இவ்வாண்டின் முதல் சில மாதங்களிலான விலை அதிகரிப்பால் அளவுக்கும் அதிகமாக எதிரீடு செய்யப்பட்டமையால் மரக்கறி துணைத்தொகுதியின் நிறையேற்றப்பட்ட சராசரி விலை 2013இல் 12.5 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை, தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் இரண்டினதும் விலை 2013இல் குறிப்பிடத்தக்க உயர் வீதங்களில் அதிகரித்தது. இது 2012இல் நிலவிய கடும் வரட்சி நிலைமைகளின் காலம் தாழ்த்திய விளைவால் ஏற்பட்டது. 2013 இலான குறைந்த விளைச்சல் மற்றும் 2012இல் பதிவு செய்யப்பட்ட தாழ்ந்த விலைகள் வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கின் விலையை 2013இல் ஒப்பீட்டு ரீதியில் அதிகரிக்கச் செய்தது.

**சராசரியாக, உடன் மீன் மற்றும் கடல் உணவின் விலை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013இல் குறைந்த வீதத்தில் அதிகரித்தது.** பருவகால நிரம்பல் அதிகரிப்பு மற்றும் பல நாள் படகுகள் மூலம் ஆழ்கடல் மீனின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக பெப்புருவரியிலிருந்து ஏப்பிறல் வரை மற்றும் யூலையிலிருந்து திசெம்பர் வரையிலான காலப்பகுதிகளில் உடன் மீனின் சராசரி விலை வீழ்ச்சியடைந்தது. எனினும், கரையோரப் பிரதேசங்களிலான பலத்த மழை காரணமாக நிரம்பலில் ஏற்பட்ட வீழ்ச்சியால் மேயிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க விலை அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது. சராசரியாக, கருவாட்டின் விலை ஆண்டின் முதலரைப் பகுதியில் தொடர்ந்து உயர்ந்து விளங்கியது. எனினும், ஆண்டின் பிற்பகுதியில் மெதுவாக வீழ்ச்சியடைந்தது. கருவாட்டு விலையில் ஏற்பட்ட ஒட்டுமொத்த அதிகரிப்பு, சந்தையில் நெத்தலியின் குறைந்த

**அட்டவணை 4.4 2011 - 2013 இல் முக்கிய பொருட்களின் நிருவகிக்கப்பட்ட விலைத் திருத்தங்கள்**

| விடயம் | | அலகு | விலை (ஆண்டு இறுதி) - ரூ. | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 2011 | 2012 | 2013 | 2012/2011 | 2013/2012 |
| டீசல் - இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | | 1 லீற்றர் | 84.00 | 115.00 | 121.00 | 36.9 | 5.2 |
| டீசல் - வரையறுக்கப்பட்ட லங்கா இந்தியன் ஒயில் கம்பனி | | 1 லீற்றர் | 84.00 | 121.00 | 121.00 | 44.0 | 0.0 |
| மண்ணெண்ணெய் | | 1 லீற்றர் | 71.00 | 106.00 | 106.00 | 49.3 | 0.0 |
| பெற்றோல் | | 1 லீற்றர் | 137.00 | 159.00 | 162.00 | 16.1 | 1.9 |
| எரிவாயு - லிட்றோ | | 12.5 கி.கி | 2,046.00 | 2,246.00 | 2,396.00 | 9.8 | 6.7 |
| எரிவாயு - லாப் | | 12.5 கி.கி | 2,046.00 | 2,246.00 | 2,396.00 | 9.8 | 6.7 |
| உலை எண்ணெய் (1000) | | 1 லீற்றர் | 48.70 | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. |
| உலை எண்ணெய் (1500) | | 1 லீற்றர் | 50.00 | 90.00 | 90.00 | 80.0 | 0.0 |
| உலை எண்ணெய் (3500) | | 1 லீற்றர் | 50.00 | 90.00 | 90.00 | 80.0 | 0.0 |
| மின்சாரம் - நிலையான கட்டணங்கள் | தீர்வைத்தொகுதி | | | | | | |
| | | முதல் 30 அலகுகள் | 30.00 | 30.00 | 30.00 | 0.0 | 0.0 |
| | | 31 - 60 அலகுகள் | 60.00 | 60.00 | 60.00 | 0.0 | 0.0 |
| | | 61 - 90 அலகுகள் | 90.00 | 90.00 | 90.00 | 0.0 | 0.0 |
| | | 91 - 180 அலகுகள் | 315.00 | 315.00 | 315.00 | 0.0 | 0.0 |
| | | 180ற்கும் மேற்பட்ட அலகுகள் | 315.00 | 315.00 | 420.00 | 0.0 | 33.3 |
| மின்சாரம் - அலகுக்கான கட்டணங்கள் (அ) | தீர்வைத்தொகுதி | | | | | | |
| | < 60 அலகுகள் | முதல் 30 அலகுகள் | 3.00 | 3.00 | 3.00 | 0.0 | 0.0 |
| | | 31 - 60 அலகுகள் | 4.70 | 4.70 | 4.70 | 0.0 | 0.0 |
| | > 60 அலகுகள் | முதல் 60 அலகுகள் | - | - | 10.00 | - | - |
| | | 61 - 90 அலகுகள் | 7.50 | 7.50 | 12.00 | 0.0 | 60.0 |
| | | 91 - 120 அலகுகள் | 21.00 | 21.00 | 26.50 | 0.0 | 26.2 |
| | | 121 - 180 அலகுகள் | 24.00 | 24.00 | 30.50 | 0.0 | 27.1 |
| | | 180ற்கும் மேற்பட்ட அலகுகள் | 36.00 | 36.00 | 42.00 | 0.0 | 16.7 |
| மின்சாரம் - எரிபொருள் சீர்ப்படுத்தும் கட்டணம் (அ) | தீர்வைத்தொகுதி | முதல் 30 அலகுகள் | - | - | - | 25.0 | 25.0 |
| | | 31 - 60 அலகுகள் | - | - | - | 35.0 | 35.0 |
| | | 61 - 90 அலகுகள் | - | - | - | 40.0 | 10.0 |
| | | 90ற்கும் மேற்பட்ட அலகுகள் | - | - | - | 40.0 | 40.0 |
| நீர் - அலகுக்கான கட்டணங்கள் | தீர்வைத்தொகுதி | | | | | | |
| | | முதல் 05 அலகுகள் | 3.00 | 8.00 | 8.00 | 166.7 | 0.0 |
| | | 06 - 10 அலகுகள் | 7.00 | 11.00 | 11.00 | 57.1 | 0.0 |
| | | 11 - 15 அலகுகள் | 15.00 | 20.00 | 20.00 | 33.3 | 0.0 |
| | | 16 - 20 அலகுகள் | 30.00 | 40.00 | 40.00 | 33.3 | 0.0 |
| | | 21 - 25 அலகுகள் | 50.00 | 58.00 | 58.00 | 16.0 | 0.0 |
| | | 26 - 30 அலகுகள் | 75.00 | 88.00 | 88.00 | 17.3 | 0.0 |
| | | 31 - 40 அலகுகள் | 90.00 | 105.00 | 105.00 | 16.7 | 0.0 |
| | | 41 - 50 அலகுகள் | 105.00 | 120.00 | 120.00 | 14.3 | 0.0 |
| | | 51 - 75 அலகுகள் | 110.00 | 130.00 | 130.00 | 18.2 | 0.0 |
| | | 75ற்கும் மேற்பட்ட அலகுகள் | 120.00 | 140.00 | 140.00 | 16.7 | 0.0 |
| பேருந்து கட்டணம் | | | | | | 20.0 | 7.0 |

(அ) 16.02.2012 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மீண்டும் சுமத்தப்பட்ட எரிபொருள் சீர்ப்படுத்தும் கட்டணமானது மாதாந்த வலுக்கட்டணத்துக்கு மட்டும் உரியது.
மின்வலுவின் நிலையான கட்டணங்கள், அலகிற்கான கட்டணங்கள் மற்றும் எரிபொருள் சீராக்கக் கட்டணம் 20.04.2013 முதல் திருத்தப்பட்டது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

உள்நாட்டு நிரம்பல் காரணமாக நெத்தலியின் சராசரி விலையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பால் பெரும்பாலும் ஏற்பட்டது. கோழித்தீனின் உயர் செலவு காரணமாக இவ்வாண்டின் முதல் மாதங்களில் கோழி இறைச்சியின் விலை அதிகரித்தது. கோழி இறைச்சி விலையில் அவதானிக்கப்பட்ட அதிகரித்துச் செல்லும் போக்கு இவ்வாண்டின் பிற்பகுதியில் நேர்மாறாகி 6.0 சதவீதம் கொண்ட ஆண்டுச் சராசரி அதிகரிப்பையுடைய மிதமான வீதத்தை ஏற்படுத்தியது. இவ்விலையிலான மெதுவடைவு 2013இன் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளூடாக உற்பத்தியை அதிகரிப்பதற்கு வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்ட செலவைக் குறைக்கும் ஊக்குவிப்புக்களால் ஏற்பட்டது. முட்டையின் சராசரி விலையும் உயர் உற்பத்திச் செலவு மற்றும் பதிலீட்டு விளைவால் இவ்வாண்டில் அதிகரித்தது.

**இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உள்நாட்டு விலைகள் பன்னாட்டுச் சந்தைகளில் விலைகளிலான அபிவிருத்திகள், செலாவணி வீதம் மற்றும் உள்நாட்டுத் தீர்வை அமைப்பு என்பவற்றுடன் இணைந்து நகர்ந்தன.** இலங்கை மத்திய வங்கியின் வர்த்தகச் சுட்டெண்களில் உணவு மற்றும் குடிவகை துணை வகையின் இறக்குமதி விலை 2012இன் 3.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 1.0 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு கொ.நு.வி சுட்டெண் கூடையிலுள்ள பால்மா, பருப்பு, பெரிய வெங்காயம் மற்றும் கோதுமை மா என்பவற்றின் விலைகளில் பிரதிபலிக்கப்பட்டது. உள்நாட்டு உற்பத்தியை ஊக்கப்படுத்துவதற்கு குறிப்பிட்ட இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை விதிப்பு/ அதிகரிப்புக் காரணமாக பால் உற்பத்திகள், தாவர எண்ணெய்,

தேங்காய் எண்ணெய் மற்றும் நெத்தலியின் விலை அதிகரிப்பு உள்நாட்டுச் சந்தையில் உயர்ந்து காணப்பட்டது. இதேவேளை, ஏனைய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி விலை 2012இன் 5.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2013இல் 1.2 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தமையை இலங்கை மத்திய வங்கியின் வர்த்தகச் சுட்டெண்கள் எடுத்துக்காட்டின. எனினும், இலங்கை மத்திய வங்கியின் வர்த்தகச் சுட்டெண்களின்படி, மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள், வீட்டுத் தளபாடங்கள் மற்றும் ஆடைகள் மற்றும் துணைப்பொருட்களின் இறக்குமதி விலைகள் இவ்வாண்டில் அதிகரித்தன. இவ்விலை மாற்றங்கள் கொ.நு.வி சுட்டெண்ணின் உரிய துணைத் தொகுதிகளிலும் பிரதிபலிக்கப்பட்டது. இதேவேளை, மிதமான தளம்பலை வெளிப்படுத்தி இலங்கை ரூபா இவ்வாண்டில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக 2.7 சதவீதம் மட்டும் கொண்ட பெறுமதித் தேய்வுடன் பணவீக்கம் மீதான நாணய பெறுமதித் தேய்வின் ஆகக் குறைந்த விளைவைப் பிரதிபலித்தது.

**மையப் பணவீக்கம் இவ்வாண்டில் மெதுவடைந்ததுடன் அதன் ஆகக் குறைந்த மட்டத்தை 2013 திசெம்பரில் அடைந்தது.** இதன்படி, ஆண்டுச் சராசரி மற்றும் ஆண்டுக்காண்டு மையப் பணவீக்கம் 2013 திசெம்பரில் முறையே 4.4 சதவீதம் மற்றும் 2.1 சதவீதத்தை அடைந்தது. இது 2012 திசெம்பரில் முறையே 5.8 சதவீதம் மற்றும் 7.6 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கது. ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் இவ்வாண்டின் முற்பகுதியில் சனவரியின் 6.1 சதவீதத்திலிருந்து மேயில் 6.6 சதவீதம் கொண்ட மிதமான உச்சநிலைக்கு சிறிதளவால் அதிகரித்தது. பின்னர், இது ஆண்டிறுதியில் அநுகூலமான 4.4 சதவீதத்தை அடைவதற்கு உறுதியாக வீழ்ச்சியடைந்தது. 2013 சனவரியில் 7.3 சதவீதத்திலிருந்து 2013 பெப்புருவரியில் 7.4 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்த ஆண்டுக்கு ஆண்டு மையப் பணவீக்கம் பின்னர் விரைவான வீதத்தில் மெதுவடைந்து 2007இல் இது அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு முன்னெப்போதும் பதிவு செய்யப்படாத தாழ்ந்த வீதமான 2.1 சதவீதத்தை திசெம்பரில் அடைந்தது. முதன்மைப் பணவீக்கத்திலான போக்கு ஆண்டுச் சராசரி அடிப்படையில் ஆண்டு முழுவதும் மையப் பணவீக்கத்தின் போக்கையே பெருமளவில் பின்பற்றியது. 2013இல் மையப் பணவீக்கத்திலான வீழ்ச்சி பயனுறுதியான கேள்வி முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் 2012இல் காணப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நிலையின் காலந்தாழ்த்திய விளைவைப் பிரதிபலிக்கிறது. இதேவேளை, 2013இல் மையப் பணவீக்கத்தில் ஆண்டுச் சராசரி மாற்றத்துக்கான பங்களிப்பு பெரும்பாலும் உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகை (70.9 சதவீதம்); வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள்கள் (8.2 சதவீதம்); ஆடை மற்றும் பாதணி (5.9 சதவீதம்); தளபாடம், வீட்டுப் பாவனைக் கருவி மற்றும் வழமையான வீட்டுப் பேணல் (4.5 சதவீதம்) என்பவற்றிலிருந்து ஏற்பட்டது.

## மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி

**உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் ஒட்டுமொத்த விலை மாற்றங்களை அளவிடும் மொ.உ.உ சுருக்கி 2012 உடன் ஒப்பிடுகையில் 2013இல் வீழ்ச்சியடைந்ததுடன் இது கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளிலான சுருக்கியின் மெதுவடைவினால் துணைபுரியப்பட்டது.** இதன்படி, மொ.உ.உற்பத்திச் சுருக்கி 2012இன் 8.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 6.7 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. கைத்தொழில் துறையின் சுருக்கி 2012இல் பதிவு செய்யப்பட்ட 10.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 7.3 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. பணவீக்கத்திலான இவ்வீழ்ச்சி கைத்தொழில் துறையின் அனைத்துத் துணை வகைகளிலும் காணக்கூடியதாக இருந்தது. பணிகள் துறையிலான சுருக்கி 2012இல் பதிவு செய்யப்பட்ட 9.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 6.3 சதவீதத்தால் அதிகரித்தது. பணிகள் துறையினுள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம்; சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள்; போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்; வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் மெய்ச் சொத்து; மற்றும் தனியார் பணிகள் துணைத் துறைகள் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுருக்கிகளில் வீழ்ச்சியைப் பதிவு செய்தன. எனினும், சொத்துடமை; மற்றும் அரச பணிகள் துணைத் துறைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர் வீதத்தில், அதிகரித்தன. வேளாண்மைத் துறைச் சுருக்கி 2012இல் பதிவு செய்யப்பட்ட 0.1 சதவீதமான சிறிய அதிகரிப்பினை தொடர்ந்து 2013இல் 6.9 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு தெங்கு மற்றும் கால்நடை துணைத் துறைகள் தவிர்ந்த வேளாண்மைத் துறையிலுள்ள அனைத்துத் துணைத் துறைகளிலான விலைகளின் அதிகரிப்பால் தாங்கப்பட்டது.

அட்டவணை 4.5 துறைரீதியான சுருக்கிகளும் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியும்

(2002=100)

| துறை | சுட்டெண் | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 2011 | 2012(அ) | 2013 (ஆ) | 2012/2011 (அ) | 2013/2012(ஆ) |
| வேளாண்மை | 247.3 | 247.5 | 264.7 | 0.1 | 6.9 |
| கைத்தொழில் | 233.2 | 258.1 | 276.9 | 10.7 | 7.3 |
| பணிகள் | 222.6 | 244.3 | 259.7 | 9.7 | 6.3 |
| **மொ.உ.உ** | **228.5** | **248.9** | **265.6** | **8.9** | **6.7** |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம் : தொகைமதிப்புப் புள்ளிவிபர திணைக்களம்

## 4.3 கூலிகள்

**அரச மற்றும் தனியார் ஆகிய இரு துறைகளிலுள்ள ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013இல் அதிகரித்தன.** பெயரளவு கூலிகளிலான அதிகரிப்பு சந்தை விலைக் கூலிகள் தீர்மானிக்கப்படும் முறைசாராத் தனியார் துறை ஊழியர்களிடையே குறிப்பிடத்தக்களவில் விளங்கியது. அரச துறையிலுள்ள ஊழியர்களுக்குச் செலுத்தத்தக்க மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படியின் மேல் நோக்கிய திருத்தம் இவ்வாண்டில் அவர்களது பெயரளவுக் கூலிகளை அதிகரிக்கச் செய்தது. ஆகக் குறைந்த கூலிகளின் அதிகரிப்புக் காரணமாக முறைசார் தனியார் துறையின் அனைத்து மூன்று துறைகளிலுள்ள ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் அதிகரித்தன. பொதுவாக, முறைசாராத் தனியார் துறையிலுள்ள ஊழியர்கள் மெய்க்கூலி அதிகரிப்பை அனுபவிக்கையில் அரச மற்றும் தனியார் துறைகளில் மெய்க்கூலிகள் 2013இல் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன.

### அரச துறைக் கூலிகள்

**அரச துறை ஊழியர்களின் பெயரளவு கூலி வீதச் சுட்டெண்கள் 2013இல் அதிகரித்தபோதிலும் அரசதுறை ஊழியர்களின் மெய்க்கூலி வீதங்கள் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தன.** பெயரளவு கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு 2013 சனவரியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் அரச துறை ஊழியர்களுக்குச் செலுத்தத்தக்க மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படி ரூ.750ஆல் மேல் நோக்கித் திருத்தப்பட்டமையாலும் ரூ. 22,935 இற்குக் குறைவான ஆரம்பச் சம்பள அளவைக் கொண்ட ஊழியர்களுக்குச் செலுத்தத்தக்க ஓய்வூதியத்துக்குட்படாத சிறப்புப்படியில் ஏற்பட்ட அதிகரிப்பாலும் ஏற்பட்டது. இவ்வதிகரிப்பு 2013 மே மற்றும் செத்தெம்பரில் இரண்டு தடவைகளில் மேற்கொள்ளப்பட்டது. இது ஒவ்வொரு தடவையும் 2.5 சதவீதத்தால் மாதாந்த அடிப்படைத் திரட்டிய சம்பளத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்டது. நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்கள், சிற்றூழியர்கள் மற்றும் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களின் பெயரளவு கூலி வீதச் சுட்டெண்கள் 2012 இலான முறையே 7.0 சதவீதம், 6.7 சதவீதம் மற்றும் 6.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் முறையே 4.8 சதவீதம், 5.1 சதவீதம் மற்றும் 4.9 சதவீதத்தால் அதிகரித்தன. இதன் விளைவாக, மத்திய அரசாங்க ஊழியர்களின் ஒட்டுமொத்த பெயரளவு கூலி வீதச் சுட்டெண் முன்னைய ஆண்டின் 6.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 5 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்கள், சிற்றூழியர்கள் மற்றும் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோர்களின் மெய்க்கூலிகள் முன்னைய ஆண்டில் முறையே 0.5 சதவீதம், 0.7 சதவீதம், 0.6 சதவீத வீழ்ச்சிகளுடன் ஒப்பிடுகையில் 2013இல் முறையே 2.0 சதவீதம், 1.7 சதவீதம் மற்றும் 1.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமை அவதானிக்கப்பட்டது. மேற்கூறிய கூலி அபிவிருத்திகளின் தாக்கம் 2013இல் மத்திய அரசாங்க ஊழியர்களின் ஒட்டுமொத்த கூலி வீதச் சுட்டெண்ணில் 1.9 சதவீத வீழ்ச்சியை ஏற்படுத்தியது

### முறைசார்ந்த தனியார் துறைக் கூலிகள்

**கூலி நிர்ணயச் சபைகளால் கூலிகள் ஆளுகைக்கு உட்படுத்தப்படும் ஊழியர்களின் ஆகக் குறைந்த கூலி**

அட்டவணை 4.6

**கூலிவீதச் சுட்டெண்கள்**

திசெம்பர் 1978=100

| தொழில்நிலை வகை | சுட்டெண் | | | | | | சதவீத மாற்றம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெயரளவு | | | உண்மையான (அ) | | | பெயரளவு | | | உண்மையான (அ) | | |
| | 2011 | 2012 | 2013 (ஆ) | 2011 | 2012 | 2013 (ஆ) | 2011 | 2012 | 2013 (ஆ) | 2011 | 2012 | 2013 (ஆ) |
| 1. அரச ஊழியர்கள் | | | | | | | | | | | | |
| **மத்திய அரச ஊழியர்கள்** | **4,964.5** | **5,304.7** | **5,568.3** | **154.7** | **153.8** | **150.9** | **6.7** | **6.9** | **5.0** | **0.0** | **-0.6** | **-1.9** |
| நிறைவேற்றுத்தரமல்லாதோர் | 4,490.1 | 4,803.6 | 5,035.6 | 139.9 | 139.3 | 136.5 | 6.6 | 7.0 | 4.8 | -0.1 | -0.5 | -2.0 |
| சிற்றூழியர்கள் | 5,465.1 | 5,831.8 | 6,130.5 | 170.3 | 169.1 | 166.2 | 6.8 | 6.7 | 5.1 | 0.1 | -0.7 | -1.7 |
| **அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள்** | **3,576.1** | **3,821.8** | **4,011.0** | **111.5** | **110.8** | **108.7** | **7.7** | **6.9** | **4.9** | **0.9** | **-0.6** | **-1.9** |
| 2. கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | | | | | | | | | | | | |
| **அனைத்து வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள்** | **2,996.1** | **3,662.0** | **3,869.2** | **93.3** | **106.2** | **104.9** | **4.6** | **22.2** | **5.7** | **-2.0** | **13.8** | **-1.2** |
| வேளாண்மைத் தொழிலாளர்கள் | 3,427.2 | 4,433.0 | 4,435.9 | 106.8 | 128.6 | 120.3 | 3.0 | 29.3 | 0.1 | -3.6 | 20.4 | -6.4 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | 2,402.1 | 2,402.1 | 3,191.6 | 74.9 | 69.7 | 86.5 | 9.2 | 0.0 | 32.9 | 2.4 | -6.9 | 24.1 |
| பணிகளிலுள்ள தொழிலாளர்கள் | 1,851.8 | 1,851.8 | 2,241.5 | 57.7 | 53.7 | 60.7 | 10.7 | 0.0 | 21.0 | 3.8 | -6.9 | 13.1 |

(அ) உண்மைக் கூலிவீதச்சுட்டெண் கொநுவிசு (2006/07=100) இனை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) தற்காலிகமானது

மூலங்கள்: தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**வீதச் சுட்டெண்களால் அளவிடப்படும் முறைசார் தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2013இல் 5.7 சதவீதத்தால் அதிகரித்தன.** இவ்வதிகரிப்பு பெரும்பாலும் கைத்தொழில் மற்றும் வர்த்தகம்; மற்றும் பணிகள் துறைகள் 2013இல் முறையே 32.9 சதவீதத்தாலும் 21.0 சதவீதத்தாலும் அதிகரித்தமையால் ஏற்பட்டது. பல துணைத் துறைகளிலுள்ள ஊழியர்களின் ஆகக் குறைந்த கூலிகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு இவ்வதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தது. எனினும், 66 சதவீத கணிசமான நிறையைக் கொண்டுள்ள வேளாண்மைத் துறையின் ஆகக் குறைந்த கூலிவீதச் சுட்டெண் முன்னைய ஆண்டிலான 29.3 சதவீத அதிகரிப்பைத் தொடர்ந்து மாற்றமின்றி விளங்கியது. முறைசார் தனியார் துறை கூலிகளின் ஒட்டுமொத்த அசைவைத் தீர்மானிப்பதில் வேளாண்மைத் துறைக் கூலிவீதச் சுட்டெண்ணின் ஆதிக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கூட்டுச் சுட்டெண் 2013இல் 5.7 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது.

**குறிப்பாக, கைத்தொழில் மற்றும் வர்த்தகம்; மற்றும் பணிகள் துறை உள்ளிட்ட முறைசார் தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் மெய்க்கூலிகள் குறிப்பிடத்தக்க இலாபத்தை அனுபவித்தன.** கைத்தொழில் மற்றும் வர்த்தகம் மற்றும் பணிகள் துறைகளிலுள்ள ஊழியர்கள் 2012இலான ஒவ்வொன்றும் 6.9 சதவீதம் கொண்ட மெய்க் கூலி வீழ்ச்சிகளுடன் ஒப்பிடுகையில் 2013இல் முறையே 24.1 சதவீதம் மற்றும் 13.1 சதவீதம் கொண்ட உண்மைக் கூலி அதிகரிப்புக்களை அனுபவித்தனர். எனினும், வேளாண்மைத் துறை 2012இலான 20.4 சதவீத மெய்க்கூலி இலாபத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 6.4 சதவீத மெய்க்கூலி இழப்பைச் சம்பாதித்தது. வேளாண்மைத் துறையிலுள்ள ஊழியர்களின் மெய்க் கூலி இழப்பு கைத்தொழில் மற்றும் வர்த்தகம் மற்றும் பணிகள் துறைகளின் மெய்க்கூலி இலாபத்தை விஞ்சியமையால் முறைசார் தனியார் துறையின் ஒட்டுமொத்த மெய்க்கூலி வீதச் சுட்டெண் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.2 சதவீதம் கொண்ட சிறு வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

## முறைசாராத் தனியார் துறைக் கூலிகள்

**முறைசாரா தனியார் துறையில் சராசரி நாளாந்தக் கூலிகள் 2013இல் பெயரளவு மற்றும் உண்மை நியதிகளில் வேறுபட்ட வீதங்களில் அதிகரித்தன.** முறைசாராத் தனியார் துறையில் கூலிகள் சுதந்திரமான சந்தைச் சூழலில் தீர்மானிக்கப்படுகிறது. இங்கு பெயரளவுக் கூலிகள் தொழில் சந்தையில் கேள்வி மற்றும் நிரம்பல் விசைகளிலான மாற்றத்தின்படி சீராக்கத்துக்கு உள்ளாக்கப்படுகின்றன. பொருளாதாரத்திலான ஒதுக்குக் கூலிகளின் மட்டமும் இது தொடர்பாக தீர்மானிக்கும் காரணியாக தொழிற்படுகிறது. முறைசாராத் துறைக் கூலிகளின்

**அட்டவணை 4.7** துறை மற்றும் பால் அடிப்படையில் முறைசாரா தனியார் துறையின் நாளாந்த கூலிகள் (அ)

| துறை | ஆண்டுச் சராசரி (ரூபா) | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | பெயரளவு | | உண்மையான (இ) | |
| | 2011 | 2012 | 2013 (ஆ) | 2012 | 2013 (ஆ) | 2012 | 2013 (ஆ) |
| 1. வேளாண்மைத்துறை | | | | | | | |
| தேயிலை | | | | | | | |
| ஆண் | 617 | 691 | 764 | 12.0 | 10.6 | 4.1 | 3.4 |
| பெண் | 438 | 512 | 565 | 16.9 | 10.4 | 8.7 | 3.2 |
| இறப்பர் | | | | | | | |
| ஆண் | 658 | 741 | 853 | 12.6 | 15.2 | 4.7 | 7.7 |
| பெண் | 490 | 585 | 652 | 19.4 | 11.4 | 11.0 | 4.3 |
| தெங்கு (ஈ) | | | | | | | |
| ஆண் | 783 | 887 | 997 | 13.3 | 12.3 | 5.4 | 5.2 |
| நெல் | | | | | | | |
| ஆண் | 704 | 787 | 882 | 11.8 | 12.1 | 4.0 | 4.8 |
| பெண் | 530 | 599 | 667 | 13.0 | 11.4 | 5.1 | 4.2 |
| 2. கட்டடவாக்கத்துறை (ஈ) | | | | | | | |
| மரவேலையாள் | | | | | | | |
| முதன்மை மரவேலையாள் - ஆண் | 1,115 | 1,248 | 1,334 | 11.9 | 6.9 | 4.1 | 0.0 |
| தேர்ச்சிபெற்ற, தேர்ச்சியற்ற உதவியாளர் - ஆண் | 729 | 824 | 903 | 13.0 | 9.6 | 5.1 | 2.5 |
| கொத்தனார் | | | | | | | |
| முதன்மை மரவேலையாள் - ஆண் | 1,093 | 1,216 | 1,304 | 11.2 | 7.2 | 3.5 | 0.3 |
| தேர்ச்சிபெற்ற, தேர்ச்சியற்ற உதவியாளர் - ஆண் | 729 | 823 | 900 | 12.9 | 9.4 | 5.0 | 2.4 |

(அ) கூலித்தகவல்கள் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் 102 நிலையங்களிருந்தான மாதாந்த கூலிகளை அடிப்படையாகக் கொண்டவை.
(ஆ) தற்காலிகமானது
(இ) உண்மைக் கூலிகள் கொ.நு.வி.சு (2006/07=100) அடிப்படையாகக் கொண்டவை
(ஈ) இத்துறைகளில் பெண் பங்கேற்பு குறைவாகும்.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

அசைவுகள் இலங்கை மத்திய வங்கியால் தொழிற்படுத்தப்படும் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் கீழ் வேளாண்மை மற்றும் கட்டட நிர்மாணத்தை உள்ளடக்கிச் சேகரிக்கப்படும் பொருத்தமான கூலித் தகவலைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

**2013இல் முறைசாராத் தனியார் துறையின் நாளாந்தக் கூலிகள் பெயரளவு நியதிகளில் 10.2 சதவீதம் கொண்ட சராசரி வீதத்தால் அதிகரித்தது.** முறைசாரா வேளாண்மை மற்றும் கட்டடவாக்கத் துறையிலுள்ள ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2013இல் முறையே 12.0 சதவீதம் மற்றும் 8.0 சதவீதத்தால் அதிகரித்தன. 2012இல் தொடர்பான அதிகரிப்புக்கள் 13.8 சதவீதமாகவும் 12.1 சதவீதமாகவும் விளங்கின. வேளாண்மைத் துறையினுள், இறப்பர், தெங்கு, நெல் மற்றும் தேயிலை துணை வகைகளில் சராசரி நாளாந்தக் கூலிகள் 2013இல் முறையே 13.4 சதவீதம், 12.4 சதவீதம், 11.7 சதவீதம் மற்றும் 10.5 சதவீதத்தால் அதிகரித்தன. 2013இல் கட்டடவாக்கத் துறையில் தச்சர் மற்றும் கொத்தனாருக்கான நாளாந்தக் கூலிகள் 2012இன் முறையே 12.4 சதவீதம் மற்றும் 11.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 8.0 சதவீதம் மற்றும் 8.1 சதவீதத்தால் அதிகரித்தன. இவ்வதிகரிப்பு பகுதியளவில் கட்டடவாக்கத் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கான தொடர்ச்சியான கேள்வி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அத்தகைய தொழிலாளர்களின் இடப்பெயர்வு காரணமாக இத்துறையில் தொழிலாளர் நிரம்பல் ஒரளவுக்குக் குறைந்தமையாலும் ஏற்பட்டது.

**முறைசாரா தனியார் துறையின் அனைத்துத் துணை வகைகளிலுமுள்ள ஊழியர்களின் மெய்க்கூலிகளும் 2013இல் அதிகரித்தன.** இதன்படி, இறப்பர், தெங்கு, நெல் மற்றும் தேயிலைத் துணைத் துறைகளின் சராசரி நாளாந்த மெய்க் கூலிகள் 2013இல் முறையே 6.1 சதவீதம், 5.2 சதவீதம், 4.5 சதவீதம் மற்றும் 3.4 சதவீதத்தால் அதிகரித்தன. கட்டடவாக்கத் துறையில் தச்சன் மற்றும் கொத்தனாரின் சராசரி நாளாந்த மெய்க்கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு முறையே 1.0 சதவீதம் மற்றும் 1.1 சதவீதமாக விளங்கியது. ஒட்டுமொத்தமாக, வேளாண்மை மற்றும் கட்டடவாக்கத் துறைகள் இரண்டும் 2012இன் 5.8 சதவீதம் மற்றும் 4.3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2013இல் 4.8 சதவீதம் மற்றும் 1.1 சதவீதம் கொண்ட மெய்க்கூலி அதிகரிப்பைப் பதிவு செய்தன. இதன் விளைவாக, முறைசாராத் தனியார் துறையில் ஊழியர்களுக்கான ஒட்டுமொத்த நாளாந்த மெய்க்கூலிகள் முன்னைய ஆண்டின் 5.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் சராசரியாக 3.1 சதவீதத்தால் அதிகரித்தன.

## 4.4 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

### குடித்தொகை

**2013இல் நடு ஆண்டு குடித்தொகை 20.483 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், 9.939 மில்லியன் ஆண்களையும் 10.544 மில்லியன் பெண்களையும் உள்ளடக்கியுள்ளது.** மொத்தக் குடித்தொகையில், 5.866 மில்லியன் அல்லது நான்கிலொரு பங்குக்கும் கூடுதலானோர் மேல் மாகாணத்தில் (28.6 சதவீதம்)

அட்டவணை 4.8 மாவட்ட அடிப்படையில் குடித்தொகை மற்றும் அடர்த்தி (அ) (ஆ)

| மாவட்டம் | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|
| | குடித்தொகை '000 நபர்கள் | அடர்த்தி | குடித்தொகை '000 நபர்கள் | அடர்த்தி |
| கொழும்பு | 2,316 | 3,425 | 2,326 | 3,441 |
| கம்பகா | 2,300 | 1,715 | 2,313 | 1,725 |
| களுத்துறை | 1,220 | 774 | 1,227 | 779 |
| கண்டி | 1,375 | 717 | 1,384 | 722 |
| மாத்தளை | 484 | 248 | 489 | 251 |
| நுவரெலியா | 710 | 416 | 719 | 421 |
| காலி | 1,061 | 656 | 1,068 | 660 |
| மாத்தறை | 812 | 639 | 819 | 645 |
| அம்பாந்தோட்டை | 599 | 240 | 606 | 243 |
| யாழ்ப்பாணம் | 585 | 629 | 589 | 634 |
| மன்னார் | 100 | 53 | 101 | 54 |
| வவுனியா | 172 | 92 | 174 | 93 |
| முல்லைத்தீவு | 92 | 38 | 93 | 39 |
| கிளிநொச்சி | 114 | 94 | 116 | 96 |
| மட்டக்களப்பு | 527 | 202 | 529 | 203 |
| அம்பாறை | 651 | 154 | 658 | 156 |
| திருகோணமலை | 380 | 150 | 384 | 152 |
| குருநாகல் | 1,616 | 349 | 1,624 | 351 |
| புத்தளம் | 763 | 265 | 769 | 267 |
| அநுராதபுரம் | 859 | 129 | 868 | 130 |
| பொலனறுவை | 404 | 131 | 408 | 133 |
| பதுளை | 815 | 288 | 822 | 291 |
| மொனராகல | 450 | 82 | 456 | 83 |
| இரத்தினபுரி | 1086 | 336 | 1,097 | 339 |
| கேகாலை | 839 | 498 | 844 | 501 |
| **மொத்தம்** | **20,328** | **324** | **20,483** | **327** |

(அ) தற்காலிகமானது

மூலம் : பதிவாளர் நாயகத்தின் திணைக்களம்

(ஆ) நடு ஆண்டு குடித்தொகை மதிப்பீடுகள், 2012ஆம் ஆண்டின் குடித்தொகை மதிப்பீடு மற்றும் வீடமைப்பு மதிப்பீட்டினதும் இயற்கை குடித்தொகை அதிகரிப்பு மற்றும் தேறிய குடியகல்வு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டது.

குறிப்பு : இம்மதிப்பீடானது 20 மார்ச்சு 2012 முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீள் குடியேற்றப்பட்டவர்களால் குடித்தொகையில் மாவட்ட மட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களை உள்ளடக்கியிருக்கவில்லை.

வசிக்கையில் ஆகக் குறைந்த குடித்தொகை மாகாணமான வட மாகாணத்தின் குடித்தொகை 1.073 மில்லியனைப் (5.2 சதவீதம்) பதிவு செய்தது. மேல் மாகாணத்தினுள், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களின் குடித்தொகை ஒவ்வொன்றும் 2 மில்லியனை விஞ்சியதுடன் இவை இரண்டும் சேர்ந்து நாட்டின் மொத்தக் குடித்தொகையின் 22.6 சதவீதத்துக்கு வகைகூறியது. ஒரு மில்லியனுக்கும் கூடுதலான குடித்தொகையைப் பதிவு செய்த மாவட்டங்களாக குருணாகல், கண்டி, களுத்துறை, இரத்தினபுரி மற்றும் காலி விளங்கின. இதற்கு மாறாக, முல்லைத்தீவு மாவட்டம் ஆகக் குறைந்த குடித்தொகையைப் பதிவு செய்தது. இலங்கையில் சதுர கிலோமீற்றர் ஒன்றுக்கான ஆட்களின் எண்ணிக்கையான குடித்தொகை அடர்த்தி நடு ஆண்டு குடித்தொகை அதிகரிப்புடன் சேர்ந்து 2012இன் 324 இலிருந்து 2013இல் 327 இற்கு அதிகரித்தது. குறிப்பாக, ஒவ்வொரு மாவட்டமும் 2013இல் குடித்தொகை அதிகரிப்பை பதிவு செய்தது. இதேவேளை, கொழும்பு மாவட்டம் ஆகக் கூடிய குடித்தொகை அடர்த்தியைப் (3,441) பதிவு செய்தது. 2013இல் உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் ஆட்களின் எண்ணிக்கை முறையே 2.629 மில்லியன் மற்றும் 2.677 மில்லியனாக விளங்கியதுடன் தேறிய குடிப்பெயர்வு ஆயிரம் ஆட்களுக்கு -2.33 ஆக விளங்கியது.

## தொழிற்படை

**15 வயதுக்கும் அதற்கும் கூடுதலான வயதுடைய பொருளாதார ரீதியில் செயற்பாட்டில் உள்ளோர் என வரைவிலக்கணம் செய்யப்படும் தொழிற்படை 2013இல் உயர்வடைந்து தொழில்புரியும் மற்றும் தொழில்புரியாத ஆட்கள் ஆகிய இரு தரப்பினரிலும் அதிகரிப்பைப் பதிவு செய்தது.** தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடத்தப்படும் காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி, தொழிற்படை 2012இன் 8.454 மில்லியனிலிருந்து 2013இல் 8.802 மில்லியனுக்கு 4.1 சதவீதத்தால் அதிகரித்தது. இம்மொத்த தொழிற்படையில் தொழில்புரியும் ஆட்கள் 95.6 சதவீதத்திற்கு வகைகூறுகையில் தொழில்புரியாத ஆட்களின் எண்ணிக்கை இவ்வாண்டில் எஞ்சிய 4.4 சதவீதத்திற்கு வகைகூறியது.

**2013இல் அதிகரித்த தொழிற்படை பங்கேற்பு வீதம் தொழில் சந்தையில் கூலி அழுத்தத்தைக் தணிப்பதால் இது வரவேற்கத்தக்க அபிவிருத்தியாகும்.** 15 வயதிற்கும் அதற்குக் கூடுதலான வயதுடைய குடும்ப அலகுக் குடித்தொகைக்கு தொழிற்படையின் விகிதமாக வரைவிலக்கணம் செய்யப்படும் தொழிற்படை பங்கேற்பு வீதம் 2012இன் 52.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 53.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. தொழிற்படை பங்கேற்பு வீதத்திலான அதிகரிப்பு பெரும்பாலும் 2012இன் 32.9 சதவீதத்திலிருந்து 2013இல் 35.6 சதவீதத்திற்கு அதிகரித்த பெண்களின் தொழிற்படை பங்கேற்பு வீதத்தால் ஏற்பட்டது. இது, தொழில்வாய்ப்புக்களைத் தேடி தொழில் சந்தைக்கு கிராமியத் துறையில் கூடுதலான பெண்கள் நுழைந்தமையால் ஏற்பட்டது. இதன்படி, கிராமியத் துறைப் பெண்களின் தொழிற்படை பங்கேற்பு வீதம் 2012இன் 33.8 சதவீதத்திலிருந்து 2013இல் 37.2 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக வீட்டுப் பணிப் பெண்களின் வெளிச்செல்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி இச்சாதகமான அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்திருக்கலாம். எனினும், ஆண்களின் தொழிற்படை பங்கேற்பு வீதம் 2012இன் 75.0 சதவீதத்திலிருந்து 2013இல் 74.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இது 2012 உடன் ஒப்பிடுகையில் 2013இல் நகர ஆண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியால் ஏற்பட்டது. இதனால், மொத்த நகர தொழிற்படை பங்கேற்பு வீதம் 2012இன் 48.4 சதவீதத்திலிருந்து 2013இல்

**அட்டவணை 4.9 குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு (அ)**

| விடயம் | 2012 | 2013 (ஆ) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1ஆம் கால் | 2ஆம் கால் | 3ஆம் கால் | 4ஆம் கால் | ஆண்டுக்கான |
| குடும்ப அலகுகளின் குடித்தொகை ‘000 ஆட்கள் | 16,081 | 16,356 | 16,358 | 16,361 | 16,365 | 16,360 |
| தொழிற்படை ‘000 ஆட்கள் | 8,454 | 8,862 | 8,866 | 8,809 | 8,671 | 8,802 |
| தொழில் உள்ளோர் | 8,118 | 8,451 | 8,475 | 8,424 | 8,320 | 8,418 |
| தொழில் அற்றோர் | 336 | 411 | 391 | 385 | 351 | 384 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (இ) | 52.6 | 54.2 | 54.2 | 53.8 | 53.0 | 53.8 |
| ஆண் | 75.0 | 75.1 | 75.5 | 74.8 | 74.4 | 74.9 |
| பெண் | 32.9 | 36.2 | 35.6 | 35.8 | 34.7 | 35.6 |

(அ) 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை மற்றும் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கிய தரவுகள்
(ஆ) தற்காலிகமானது
(இ) குடும்ப அலகுகளின் குடித்தொகையில் தொழிற்படையின் சதவீதம்

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 4.10 பொருளாதார செயற்பாடுகளின்படி தொழில்நிலை (அ) (ஆ)

| துறை | ('000 நபர்கள்) | | | | | | மொத்த தொழில் நிலையில் சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 (இ) | | | | | 2012 | 2013 (இ) |
| | | 1ஆம் கால் | 2ஆம் கால் | 3ஆம் கால் | 4ஆம் கால் | ஆண்டுக்கான | | |
| **வேளாண்மை** | **2,551** | **2,385** | **2,668** | **2,418** | **2,547** | **2,504** | **31.4** | **29.7** |
| **கைத்தொழில்** | **2,135** | **2,273** | **2,218** | **2,222** | **2,095** | **2,202** | **26.3** | **26.2** |
| கல்லுடைத்தலும் சுரங்கம் அகழ்தலும் | 87 | 91 | 125 | 99 | 85 | 100 | 1.1 | 1.2 |
| தயாரிப்பு | 1,432 | 1,563 | 1,482 | 1,560 | 1,452 | 1,514 | 17.6 | 18.0 |
| கட்டடவாக்கம், மின்வலு, வாயு, நீராவி, குளிரூட்டப்பட்ட வழங்கல், நீர் வழங்கல், கழிவு நீர் அமைப்பு, கழிவு முகாமைத்துவம் மற்றும் சூழல் மாசடைதலை தவிர்க்கும் நடவடிக்கைகள் | 616 | 620 | 611 | 563 | 558 | 588 | 7.6 | 7.0 |
| **பணிகள்** | **3,432** | **3,793** | **3,590** | **3,784** | **3,678** | **3,711** | **42.3** | **44.1** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஈருளிகளில் பழுதுபார்த்தல் | 1,122 | 1,180 | 1,182 | 1,153 | 1,089 | 1,151 | 13.8 | 13.7 |
| போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் | 497 | 538 | 530 | 467 | 534 | 517 | 6.1 | 6.1 |
| வதிவிடம் மற்றும் உணவுச் சேவை நடவடிக்கைகள் | 130 | 172 | 205 | 180 | 195 | 188 | 1.6 | 2.2 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் | 70 | 60 | 64 | 82 | 45 | 63 | 0.9 | 0.7 |
| நிதி மற்றும் காப்புறுதி நடவடிக்கைகள் | 130 | 171 | 150 | 167 | 124 | 153 | 1.6 | 1.8 |
| தொழில்சார், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகள் | 57 | 79 | 74 | 71 | 48 | 68 | 0.7 | 0.8 |
| நிர்வாகம் மற்றும் துணைச்சேவை நடவடிக்கைகள் | 76 | 113 | 93 | 112 | 110 | 107 | 0.9 | 1.3 |
| பொது நிர்வாகம் மற்றும் கட்டாய சமூக பாதுகாப்பு | 567 | 681 | 535 | 631 | 669 | 629 | 7.0 | 7.5 |
| கல்வி | 335 | 305 | 290 | 380 | 344 | 330 | 4.1 | 3.9 |
| மனிதநல மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 134 | 136 | 135 | 146 | 147 | 141 | 1.7 | 1.7 |
| ஏனையவை (ஈ) | 313 | 359 | 332 | 395 | 371 | 364 | 3.9 | 4.3 |
| **மொத்த தொழில்நிலை** | **8,118** | **8,451** | **8,475** | **8,424** | **8,320** | **8,418** | **100.0** | **100.0** |
| தொழிற்படையின் சதவீதமாக | 96.0 | 95.4 | 95.6 | 95.6 | 95.9 | 95.6 | | |

(அ) பன்னாட்டு சாதாரண கைத்தொழில் வகைப்படுத்தல் - திருத்தம் 4இற்கு அமைவாக பொருளாதார நடவடிக்கைகள் மேல் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

(ஆ) 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை மற்றும் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கிய தரவுகள்

(இ) தற்காலிகமானது

(ஈ) தொழில் வழங்குநர்களாக குடியிருப்புகளின் நடவடிக்கைகள், மெய் ஆதனங்கள், கலை கேளிக்கை மற்றும் பொழுதுபோக்கு, ஆட்சிப் பகுதிக்கு அப்பால் உள்ள நிறுவனங்கள் மற்றும் நடவடிக்கைகள் உள்ளடங்கலாக

47.8 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்ததுடன் மொத்த கிராமிய தொழிற்படை பங்கேற்பு வீதம் 2012இன் 53.5 சதவீதத்திலிருந்து 55.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## தொழில்நிலை

**தொழில்நிலை உருவாக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான பங்களிப்பு ஆகிய இரு நியதிகளிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வந்த பணிகள் துறையில் உருவாக்கப்பட்ட அதிகரித்த தொழில் வாய்ப்புக்கள் காரணமாக தொழில்புரியும் ஆட்களின் எண்ணிக்கை 2013இல் அதிகரித்தது.** தொழில்நிலை 3.7 சதவீதத்தால் அதிகரித்து 2013இல் 8.418 மில்லியனை அடைந்தது. 2012 இற்கும் 2013 இற்கும் இடையே பொருளாதாரத்தின் முக்கிய துறைகளுக்கிடையே தொழில்நிலை அமைப்பில் முன்னேற்றம் காணப்பட்டது. வேளாண்மைத் துறையில் தொழில்நிலையின் பங்கு 2012இன் 31.4 சதவீதத்திலிருந்து 29.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இது சாதகமான அபிவிருத்தியாகும். ஏனெனில் வேளாண்மைத் துறையிலான தொழிலாளரின் உயர் செறிவு, காரணமாக இத்துறையில் தொழிலாளர் உற்பத்தித்திறன் ஒப்பீட்டு ரீதியில் குறைந்து காணப்பட்டது. இதேவேளை, கைத்தொழில் துறையில் தொழில்புரிவோரின் பங்கு 2012இன் 26.3 சதவீதத்திலிருந்து 26.2 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இது பெரும்பாலும் 2012 உடன் ஒப்பிடுகையில் நாட்டில் கட்டடவாக்கச் செயற்பாடுகளிலான மெதுவடைவால் ஏற்பட்டது. எனினும், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் மற்றும் தயாரிப்பு துணைத் துறையில் தொழில்நிலை அதிகரித்தது. பொருளாதாரத்தில் மிகப் பெரிய துறையான பணிகள் துறை 2013இல் கூடுதலான தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்குப் பெருமளவில் பங்களிப்புச் செய்தது. இதன்படி, இத்துறையிலான தொழில்நிலை கிட்டத்தட்ட

**அட்டவணை 4.11 தொழில்நிலைத் தகைமை (அ)**

சதவீதம்

| காலம் | அரசதுறை ஊழியர்கள் | தனியார் துறை ஊழியர்கள் | தொழில் தருநர்கள் | சுயவேலை செய்வோர் | கொடுப்பனவற்ற குடும்ப தொழிலாளர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2012 | 15.1 | 41.3 | 2.8 | 31.9 | 8.8 | 100.0 |
| **2013 (ஆ)** | **15.1** | **40.6** | **3.0** | **32.2** | **9.1** | **100.0** |
| 1 ஆம் காலாண்டு | 15.5 | 40.7 | 3.2 | 31.2 | 9.4 | 100.0 |
| 2 ஆம் காலாண்டு | 13.1 | 40.6 | 3.2 | 33.0 | 10.0 | 100.0 |
| 3 ஆம் காலாண்டு | 16.4 | 40.1 | 3.0 | 31.5 | 9.0 | 100.0 |
| 4 ஆம் காலாண்டு | 15.3 | 41.1 | 2.8 | 32.9 | 7.8 | 100.0 |

(அ) 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை மற்றும் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கிய தரவுகள்.
(ஆ) தற்காலிகமானது

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

அனைத்துத் துணைத் துறைகளிலான தொழில்நிலையிலான அதிகரிப்புக்களால் உதவப்பட்டு 2012இன் 42.3 சதவீதத்திலிருந்த 44.1 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**மொத்தத் தொழில்புரிவோரில் 40.6 சதவீதம் கொண்ட மிகப் பெரிய பங்கு தனியார் துறையில் காணப்பட்ட போதிலும், ஒப்பீட்டு ரீதியிலான பங்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013இல் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.** மொத்தத் தொழில்நிலையில் தொழில்தருநர் மற்றும் சுயதொழில்புரிவோரின் பங்கு 2012இன் 34.7 சதவீதத்திலிருந்து 2013இல் 35.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. இப்போக்கு வெளித்தரப்பினரால் உருவாக்கப்பட்ட தொழில்களில் குறைந்த தங்கியிருத்தலின் அறிகுறியாகும். பணம் செலுத்தப்படாத குடும்பப் பணியாளர்களின் பங்கும் இவ்வாண்டில் அதிகரித்ததுடன் இது தொழிற்படைக்கு கிராமியத் தொழில்துறைப் பெண்களின் பங்கேற்பில் ஏற்பட்ட அதிகரிப்பால் விளக்கப்படலாம்.

**மத்திய வங்கியால் நடத்தப்பட்ட அரச துறை தொழில் அளவீட்டால் வெளிப்படுத்தப்பட்டவாறு அரச துறையிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 2013இல் 1,282,917 இற்கு 2.7 சதவீதத்தால் அதிகரித்தது.** அரச மற்றும் அரசசார் துறைகள் இரண்டிலும் இவ்வதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அரச துறை தொழில்நிலையிலான அதிகரிப்பு, 2013இல் அரச துறை தொழில்நிலையின் அதிகரிப்புக்கு 95.7 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்த அரச துறையில் 3.3 சதவீதத்தால் அதிகரித்தமையின் பெருமளவு காரணமாக ஏற்பட்டது. இவ்வதிகரிப்பு பெரும்பாலும் மாகாண சபைகள் மற்றும் அமைச்சுக்களிலான ஊழியர்களின் ஆட்சேர்ப்பால் ஏற்பட்டது. அரசசார் துறை தொழில்நிலையில் ஏற்பட்ட அதிகரிப்பு 0.6 சதவீதமாக விளங்கியதுடன் அரச துறையில் மொத்த ஊழியர்களின் 20.0 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செய்தது. அரசசார் துறையிலுள்ள அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான சிரேஷ்ட தரத்திலான ஊழியர்களின் எண்ணிக்கை, மொத்த அரச தொழில்நிலையில் அவர்களின் எண்ணிக்கை மற்றும் பங்கு குறிப்பிடத்தக்களவில் குறைவாக விளங்கிய போதிலும், குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் கொண்டிருந்தது.

**அட்டவணை 4.12 அரசதுறை தொழில்நிலை**

| துறை | 2011 | 2012 | 2013 (அ) | சதவீத மாற்றம் 2012/2011 | சதவீத மாற்றம் 2013/2012 (அ) |
|---|---|---|---|---|---|
| அரசு (ஆ) | 980,589 | 993,912 | 1,026,728 | 1.4 | 3.3 |
| அரசுசார் (இ) | 249,199 | 254,728 | 256,189 | 2.2 | 0.6 |
| **அரசதுறை** | **1,229,788** | **1,248,640** | **1,282,917** | **1.5** | **2.7** |


(அ) தற்காலிகமானது
(ஆ) மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றம், மற்றும் மாகாண சபைகள்
(இ) அரசகூட்டுத்தாபனங்கள் நியதிச் சபைகள் அரச அதிகார சபைகள்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## தொழிலின்மை

**தொழில் சந்தைக்கு புதிதாகத் தொழில் தேடுவோர் நுழைந்ததன் மூலம் தொழிலின்மை வீதம் 2013இல் அதிகரித்தது.** இவ்வாண்டின் முதலாம் காலாண்டில் 4.6 சதவீதமாக விளங்கிய தொழிலின்மை வீதம் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கைத் தொடர்ந்து 2013இன் நான்காம் காலாண்டில் 4.1 சதவீதத்தையடைந்து முன்னைய ஆண்டின் 4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 4.4 சதவீதம் கொண்ட வருடாந்த தொழிலின்மை வீதத்தை விளைவித்தது. தொழிலற்ற ஆட்களின் மொத்த எண்ணிக்கை 2012இன் 0.336 மில்லியனிலிருந்து 0.384 மில்லியனுக்கு அதிகரித்தது. இது தொழிற்படையில் கிராமியத் துறைப் பெண்களின் நுழைவால் உதவப்பட்ட தொழிற்படை பங்கேற்பிலான அதிகரிப்பால் ஏற்பட்டது. பெண்கள் மற்றும்

**வரைபடம் 4.2 தொழிற்படை மற்றும் தொழிலின்மையின் போக்குகள் (2009-2013)**




குறிப்பு : 2011ஆம் ஆண்டில் நான்காவது காலாண்டுக்கும் 2012ஆம் ஆண்டில் முதலாவது காலாண்டுக்கும் உரிய காலாண்டு தொழிற்படை அளவீடானது தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவில்லை மற்றும் 2012இலிருந்தான தரவுகள் 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகையை குறித்துக் காட்டுகிறது.

அட்டவணை 4.13 தொழிலின்மை வீதம் (தொழிற்படையின் சதவீதமாக தொழிலற்றோர்) (அ)

| வகை | 2012 | 2013 (ஆ) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1ஆம் கால் | 2ஆம் கால் | 3ஆம் கால் | 4ஆம் கால் | ஆண்டுக்குரிய |
| **அனைத்து** | **4.0** | **4.6** | **4.4** | **4.4** | **4.1** | **4.4** |
| **பால் வகைப்படி** | | | | | | |
| ஆண் | 2.9 | 3.3 | 3.1 | 3.4 | 2.8 | 3.2 |
| பெண் | 6.2 | 7.0 | 6.9 | 6.0 | 6.4 | 6.6 |
| **கல்விமட்ட அடிப்படையில்** | | | | | | |
| வகுப்பு 4/ஆண்டு 5 மற்றும் அதற்கு கீழ் | - | - | - | - | - | - |
| வகுப்பு 5-9/ஆண்டு 6-10 | 3.2 | 3.7 | 3.2 | 3.8 | 2.9 | 3.4 |
| கா.பொ.த (சா/த) | 6.0 | 6.0 | 5.4 | 6.7 | 5.7 | 5.9 |
| கா.பொ.த (உ/த) மற்றும் அதற்கு மேல் | 7.5 | 9.2 | 10.2 | 6.8 | 8.1 | 8.6 |
| **வயது அடிப்படையில்** | | | | | | |
| 15-19 | 18.9 | 18.3 | 20.5 | 18.8 | 16.7 | 18.7 |
| 20-24 | 16.8 | 20.7 | 19.9 | 16.6 | 19.7 | 19.2 |
| 25-29 | 6.7 | 7.5 | 6.4 | 8.0 | 8.3 | 7.5 |
| 30-39 | 2.5 | 2.7 | 3.0 | 3.0 | 2.2 | 2.7 |
| 40 உம் அதற்கு மேலும் | 0.8 | 1.2 | 0.8 | 1.2 | 0.8 | 1.0 |

(அ) 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை மற்றும் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கிய தரவுகள்
(ஆ) தற்காலிகமானது

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

ஆண்களிடையேயான தொழிலின்மை 2012இன் முறையே 6.2 சதவீதம் மற்றும் 2.9 சதவீதத்திலிருந்து 2013இல் முறையே 6.6 சதவீதம் மற்றும் 3.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**க.பொ.த (சா.த) சித்தியடைந்த ஆட்களிடையேயான தொழிலின்மை 2012இன் 6.0 சதவீதத்திலிருந்து 2013இல் 5.9 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.** எனினும், தரம் 5 - 9 சித்தியடைந்த வகையினர் மற்றும் க.பொ.த (உ.த) மற்றும் இதற்குக் கூடுதலான வகையிடையேயான தொழிலின்மை இவ்வாண்டில் அதிகரித்தது. 8.6 சதவீதம் கொண்ட ஆகக் கூடிய தொழிலின்மை வீதம் க.பொ.த. (உ.த) மற்றும் இதற்குக் கூடுதலான தகைமையுடைய ஆட்களிடையே பதிவு செய்யப்பட்டமை கவனத்திற்குரிய விடயமாகும். இது தகுதிகளுக்கும் சந்தைத் தேவைப்பாட்டுக்குமிடையேயான பொருத்தப்பாடின்மையைப் பிரதிபலித்ததுடன், பெரும்பாலும் கல்வியில் கூடிய தராதரமுடைய ஆட்களின் நிரம்பலால் இது மேலும் தூண்டப்பட்டது. நாடு பிரபல்யமான மூன்றாம் நிலைக் கல்வி முறைமையைக் கொண்டிருந்த போதிலும் இந்நிறுவனங்களின் பாடவிதானம் நவீனப் பொருளாதாரத்தில் தேவைப்படும் தேர்ச்சிகளை உருவாக்காத தொழில்நுட்பமற்ற ஒழுங்குமுறைகளில் பெரிதும் கவனம் செலுத்துகிறது. இது கல்வி மற்றும் தொழிற்பயிற்சி முறைமையில் சீர்திருத்தங்களுக்கான தேவையை எடுத்துக்காட்டுகிறது. கற்றல் மற்றும் விரைவாகப் பின்பற்றும் ஆற்றலுடன் சிக்கலான வேலையை எடுக்கும் இயலுமை, சுதந்திரமான ஆராய்ச்சியை மேற்கொள்ளல் மற்றும் தொழில்நுட்ப புத்தாக்கங்களை உருவாக்கக்கூடிய மனித வளங்களை உற்பத்தி செய்வதற்கு உயர் கல்வி முறைமையை சீர்திருத்தம் செய்தல் வேண்டும்.

**இளைஞர்களிடையேயான தொழிலின்மை 2013இல் தொடர்ந்து உயர்வாகக் காணப்பட்டது.** 15-19 வயதுத் தொகுதியினரிடையேயான தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013இல் சிறிதளவில் வீழ்ச்சியடைந்த போதிலும் 18.7 சதவீதத்திலேயே தொடர்ந்து விளங்கியது. 20-24 வயதுகளுக்கிடையேயான தொகுதியினர் 19.2 சதவீதம் கொண்ட கடுமையான தொழிலின்மை வீதத்தால் பாதிப்படைந்தனர். இது 2012இல் பதிவு செய்யப்பட்ட 16.8 சதவீதத்திலிருந்தான அதிகரிப்பாகும். இது இளைஞர்களிடையேயான அபிலாசைகள் மற்றும் உணர்வுகள், அவர்களது அறிவு மற்றும் தேர்ச்சிகள் மற்றும் சந்தையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொழில் வாய்ப்புக்களால் தூண்டப்பட்ட தொழிலாளர்களின் கேள்வி மற்றும் நிரம்பல்களுக்கிடையேயான பொருத்தப்பாடின்மையால் ஏற்பட்டிருக்கலாம். உள்ளகப் பயிற்சிகளுக்கான வாய்ப்புக்களுடன் சேர்ந்து தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சியின் தொடர்ச்சியான நிரம்பல் இளைஞர்களிடையே தொழிலுக்கமர்த்தக்கூடிய தன்மையை அதிகரிப்பதற்குக் காரணமாக விளங்கும். இத்துடன், நிதியியல் அறிவில் விழிப்பூட்டலின் விரிவாக்கம், தொழில் முயற்சியாளர் இயலுமையை முன்னேற்றுவதற்கான முகாமைத்துவத் தேர்ச்சிகள் மற்றும் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப உதவியை அபிவிருத்தி செய்தல் என்பன சுயமான மற்றும் பல்வகைத் தொழில்வாய்ப்புக்களை உருவாக்க உதவுவதுடன் பொருளாதாரத்தில் தொழிலின்மை வீதத்தையும் தணிக்க உதவும்.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

**வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் தொழில்நிலையின் முக்கிய மூலமாகவும் நாட்டுக்கான வெளிநாட்டுச் செலாவணியின் முக்கிய உழைப்பாளராகவும் விளங்கி 2013இல் தொடர்ந்து அதிகரித்தது.** 2013இல் கடந்த சில ஆண்டுகளைப் போலவே வெளிநாட்டுத் தொழிலுக்காக செல்பவர்களின் மொத்த எண்ணிக்கை அதன் அதிகரித்துச் செல்லும் போக்கைத் தொடர்ந்தது. இதன்படி, வெளிநாட்டுத் தொழிலுக்காகச் சென்ற மொத்த புலம்பெயர்வுகள், அதிகாரிகளால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக வீட்டுப் பணிப் பெண்கள் வகையின் கீழான புலம்பெயர்வுகளில் ஏற்பட்ட 18.6 சதவீதம் கொண்ட கணிசமான வீழ்ச்சிக்கு மத்தியிலும் 2012இன் 282,447 உடன் ஒப்பிடுகையில் 2013இல் 293,105 இற்கு 3.8 சதவீதத்தால் அதிகரித்தன. மொத்தப் புலம்பெயர்வுகளிலான அதிகரிப்பு தொழில்சார் நிபுணர்கள், மத்திய வகுப்பு, எழுதுவினைஞர், தேர்ச்சி பெற்றோர் மற்றும் தேர்ச்சி பெறாதோர் வகைகளில் வெளிநாட்டு தொழில்நிலைக்கான புலம்பெயர்விலான குறிப்பிடத்தக்க வளர்ச்சியால் ஏற்பட்டது. உயர் தேர்ச்சியுடைய வகைகளின் வெளிச் செல்கைகளிலான அதிகரிப்புக்கு மத்தியிலும் மொத்தப் புலம்பெயர்வில் அவற்றின் பங்கு ஓரளவு தேர்ச்சி பெற்றோர், தேர்ச்சி பெறாதோர் மற்றும் வீட்டுப் பணிப் பெண்கள் வகைகளின் கீழ்வரும் புலம்பெயர்வை விடக் குறைவாகும். ஓரளவு தேர்ச்சி பெற்ற வகையின் கீழான வெளிச்செல்கைகள் 2013இல் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தன. 2013இல் மொத்தப் புலம்பெயர்வில் ஓரளவு தேர்ச்சி பெற்ற புலம்பெயர்வோர் 1.2 சதவீதத்தை மட்டுமே பங்களிப்புச் செய்ததால் மொத்த வெளிச் செல்கைகளில் இவ்வீழ்ச்சியின் தாக்கம் புறக்கணிக்கத்தக்கதாகும்.

**வீட்டுப் பணிப் பெண்கள் வகையின் கீழ் மொத்தப் புலம்பெயர்வில் இதன் எண்ணிக்கை மற்றும் பங்கு 2013இல் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது.** எனினும், இலங்கையின் புலம்பெயர்ந்த தொழிற்படை மத்திய கிழக்கில் உயர் பூகோளச் செறிவுடன் வீட்டுப் பணிப் பெண்கள் மற்றும் குறைந்த தேர்ச்சியுடைய பணியாளர்கள் வகையை நோக்கி பக்கச்சார்பாக விளங்கியது. மொத்த வெளிச் செல்கைகளில் கிட்டத்தட்ட மூன்றிலொரு பகுதி மற்றும் புலம்பெயர்ந்த பெண்களில் 82.1 சதவீதமானோர் வீட்டுப் பணிப் பெண்களாவர். இருப்பினும், வீட்டுப் பணிப்பெண் வகையின் கீழான வெளிச் செல்கைகள் அதிகாரிகளால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் கடுமையாக பின்பற்றப்பட்டமையால் 2013இல் வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வொழுங்கு விதிகள் பொருளாதார நன்மையை விட நாட்டுக்குக் கூடிய தீமையை ஏற்படுத்தக்கூடிய பெண்களின் வெளிச்செல்கைகளின் சமூகச் செலவைக் குறைக்கும் பொருட்டு 5 வயதுக்கும் குறைவான பிள்ளைகளை வைத்திருக்கும் தாய்மார்களின் வெளிச் செல்கைகளைத் தடுத்தல் மற்றும் பெண்களுக்கான ஆகக் குறைந்த வயதுத் தேவைப்பாடுகளை விதித்தல் போன்றவற்றை உள்ளடக்குகிறது. இதன் விளைவாக, மொத்த வெளிச்செல்கைகளில் வீட்டுப் பணிப்பெண்களின் ஒப்பீட்டு ரீதியிலான பங்கு 2012இன் 42.1 சதவீதத்திலிருந்து 2013இல் 33.1 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. 2013இல் வீட்டுப் பணிப்பெண்களில் கிட்டத்தட்ட 98 சதவீதம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர். இதில் 71 சதவீதத்துக்கும் கூடுதலானவர்களை சவூதி அரேபியா மற்றும் குவைத் என்பன ஈர்த்துக்கொண்டன.

**அட்டவணை 4.14** வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்காக சென்றோர்

| தொழில்நிலை | 2011 | | 2012(அ) | | 2013 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| மொத்த தொழிலிலுள்ளோர் | **262,961** | **100.0** | **282,447** | **100.0** | **293,105** | **100.0** |
| மூலத்தின்படி | | | | | | |
| உரிமம்பெற்ற முகவர்கள் | 146,293 | 55.6 | 175,169 | 62.0 | 180,605 | 61.6 |
| ஏனையோர் | 116,668 | 44.4 | 107,278 | 38.0 | 112,500 | 38.4 |
| பால் வகையின்படி | | | | | | |
| ஆண்கள் | 136,307 | 51.8 | 144,135 | 51.0 | 175,047 | 59.7 |
| பெண்கள் | 126,654 | 48.2 | 138,312 | 49.0 | 118,058 | 40.3 |
| மனிதவலு வகையின் படி | | | | | | |
| தொழில் வல்லுனர்கள் | 3,848 | 1.5 | 4,448 | 1.6 | 5,140 | 1.7 |
| நடுத்தர மட்டம் | 6,136 | 2.3 | 9,280 | 3.3 | 16,508 | 5.6 |
| எழுத்துவினைஞர் மற்றும் தொடர்பானோர் | 9,907 | 3.8 | 16,184 | 5.7 | 26,550 | 9.1 |
| தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 67,746 | 25.8 | 67,150 | 23.8 | 73,600 | 25.1 |
| ஓரளவு தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 4,182 | 1.6 | 3,467 | 1.2 | 3,412 | 1.2 |
| தேர்ச்சியற்ற தொழிலாளர் | 63,642 | 24.1 | 62,907 | 22.3 | 70,961 | 24.2 |
| வீட்டுப் பணிப் பெண்கள் | 107,500 | 40.9 | 119,011 | 42.1 | 96,934 | 33.1 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம் : இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

அட்டவணை 4.15 நாடுகளின் அடிப்படையில் தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு சென்றோர்

| நாடு | 2012(அ) | | 2013 (ஆ) | | மாற்றம் (ஆ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | சதவீதம் |
| சவுதி அரேபியா | 97,964 | 34.7 | 80,836 | 27.6 | -17,128 | -17.5 |
| கட்டார் | 57,504 | 20.4 | 80,724 | 27.5 | 23,220 | 40.4 |
| குவைத் | 44,244 | 15.7 | 42,739 | 14.6 | -1,505 | -3.4 |
| ஐக்கிய அரபு இராச்சியம | 38,297 | 13.6 | 48,486 | 16.6 | 10,189 | 26.6 |
| ஏனையவை | 44,438 | 15.7 | 40,320 | 13.7 | -4,118 | -9.3 |
| மொத்தம் | 282,447 | 100.0 | 293,105 | 100.0 | 10,658 | 3.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம் : இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

**வெளிநாட்டு வேலைக்காகச் செல்லும் ஆண்களின் எண்ணிக்கை மற்றும் ஒப்பீட்டு ரீதியிலான பங்கு ஆகிய இரண்டும் கடந்த சில ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்கைப் பின்பற்றி 2013இலும் தொடர்ந்து அதிகரித்தது.** 2013இல் தொழில் வாய்ப்புக்காக வெளிநாட்டுக்குச் செல்லும் ஆண்களின் எண்ணிக்கை பெண்களின் வெளிச் செல்கைகளிலான 14.6 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 21.4 சதவீதத்தால் கணிசமானளவில் அதிகரித்தது. இதன் விளைவாக, ஆண்கள் மற்றும் பெண்களின் வெளிச் செல்கைகளின் விகிதம் 2012இன் 51:49 உடன் ஒப்பிடுகையில் 2013இல் 60:40 ஆக விளங்கியது. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான மொத்த வெளிச்செல்கைகளில் ஆண்கள் மற்றும் பெண்களின் ஒப்பீட்டு ரீதியிலான பங்குக்கிடையிலான அகன்றுவரும் இடைவெளி இவ்வாண்டில் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தது, இது வீட்டுப் பணிப் பெண்களாக பெண் பணியாளர்களை ஊக்கமிழக்கச் செய்யவும், தேர்ச்சி பெற்ற ஆண் தொழிலாளர்களின் புலம்பெயர்வை ஊக்குவிப்பதற்கும் அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட முன்மொழிவுகளின் பயனுறுதியைப் பிரதிபலிக்கிறது.

**2013இல் மொத்த வெளிச்செல்கைகளில் 93.9 சதவீதம் மத்திய கிழக்கு நாடுகளுக்கானவையாகும்.** இது 2012இன் 263,704 இலிருந்து 2013இல் 275,324 இற்கான 4.4 சதவீத அதிகரிப்பாகும். மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள பணியாளர்கள் நாட்டுக்கான தொழிலாளர்களின் பணவனுப்பல் வருவாய்களில் பெரும்பங்குக்கு பங்களிப்புச் செய்தனர். மத்திய கிழக்கு தவிர்ந்த சேருமிடங்கள் மொத்த வெளிச்செல்கைகளில் 6.1 சதவீதத்தை ஈர்த்ததுடன் 17,781 தொழிலாளர்களுக்கு வகைகூறின. மலேசியா, சீசெல்ஸ், மொரீசியஸ், ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகள் புலம்பெயரும் இலங்கைத் தொழிலாளர்களை அதிகளவில் கவர்ந்து கொண்டன.

**உரிமம் பெற்ற முகவர்கள் மற்றும் ஏனைய மூலங்களூடாக ஒழுங்குசெய்யப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான வெளிச்செல்கைகள் இவ்வாண்டில் அதிகரித்தன.** மொத்த வெளிச்செல்கைகளில் 61.6 சதவீதம் கொண்ட பெரும்பாலானவை உரிமம் பெற்ற முகவர்களூடாக ஒழுங்குசெய்யப்பட்டிருக்கையில் எஞ்சியவை ஏனைய மூலங்களூடாக ஒழுங்குசெய்யப்பட்டன. வெவ்வேறு வயதுத் தொகுதிகளின் கீழான வெளிச்செல்கைகளைக் கவனத்திற் கொண்டால் 30-34 வயதுகள் தொகுதி மொத்த வெளிச்செல்கைகளின் ஆகக் கூடிய பங்கைப் பதிவு செய்ததுடன், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.6 சதவீத அதிகரிப்பாகும். இக்குழுவிலுள்ள ஊழியர்களில் பெரும்பாலானோர் வீட்டுப் பணிப்பெண்களைக் கொண்டிருந்தனர். 20-24 மற்றும் 25-29 வயதுத் தொகுதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வெளிச்செல்கைகளில் குறைந்த வீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இது இலங்கையில் இளைஞர்களிடையே தொழில்வாய்ப்பின்மையை பாதித்திருக்கலாம்.

**வெளிநாடுகளில் தொழில்வாய்ப்பைத் தேடும் இலங்கைப் பிரஜைகளுக்கான கௌரவம், பாதுகாப்பு மற்றும் சமத்துவத்தை உறுதிசெய்யும் பொருட்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பல நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.** புலம்பெயர் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களைப் பாதுகாத்தல் மற்றும் அதிகாரமளிக்கும் குறிக்கோளுடன் 2013இல் பல நலன்புரி மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் காப்புறுதித் திட்டங்கள், புலம்பெயர்ந்த பணியாளர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில், தாய்நாட்டுக்கு திருப்பியழைத்தல், மருத்துவ வசதிகள், புலம்பெயர் பணியாளர்கள், துயருறும் புலம்பெயர் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கான நிதி உதவி 'ரட்டவிருவோ நிகழ்ச்சித்திட்டம்' மற்றும் 'ரட்டவிரு காப்புறுதிச் சேவை' என்பவற்றை உள்ளடக்குகின்றன. வெளிச்செல்கைக்கு முன்பு பயிற்சி வழங்கல் மற்றும் மீள்தேர்ச்சியளித்தலை வழங்குவதன் மூலம் ஊழியர்களின் தரத்தை தரமுயர்த்தும் பொருட்டு தேசிய தொழில் தகைமை தரம் 3 கட்டாய தேவைப்பாடாக அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், தென்கொரியாவுக்குச் செல்லும் பணியாளர்களுக்காக செல்வதற்கு முன்னதாக இலக்கிடப்பட்ட பயிற்சியை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தொடர்ந்து வழங்கியது.

**வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக நாட்டை விட்டுச்செல்லும் தாய்மார்கள் காரணமாக எழும் சமூகச் செலவை மிகவும் குறைக்கும் குறிக்கோளுடன் பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** தொடர்பான பிரதேச செயலகத்தினூடாக பெண் பணியாளர்கள் தொடர்பான குடும்பப் பின்னணி அறிக்கையைச் சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டது. இவ்வறிக்கை விவாக நிலை, பிள்ளைகள் இருப்பின் அவர்கள் மற்றும் பாதுகாவலர்கள் பற்றிய தகவல் மற்றும் பணியாளர்களில் தங்கியிருப்போர் விபரங்களை உள்ளடக்குகிறது. உரிமம் பெற்ற அனைத்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களும் இத்தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுக வேண்டும். மேலும், வீட்டுப் பணியாளர்களாக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக புலம்பெயரும் பெண் பணியாளர்களின் ஆகக் குறைந்த வயது எல்லை 2013 மேயிலிருந்து நாட்டின் அடிப்படையில் மேல் நோக்கி திருத்தப்பட்டது. இத்துடன், சவுதி அரேபியாவில் வீட்டுப் பணிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பெண் ஊழியர்களுக்கான ஆகக் குறைந்த சம்பள அளவு 2013 யூலையிலிருந்து அதிகரிக்கப்பட்டது.

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நாடு முழுவதிலுமுள்ள மக்களுக்கு வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் பணிகள் பெறும் வாய்ப்பை இலகுவாக்குவதற்கும் பல வழிமுறைகளை எடுத்துள்ளது.** தொழிலாளர் பிணக்குகளை சமரசம் செய்யும் பொறிமுறை பிராந்திய மற்றும் மாவட்ட நிலையங்களுக்கான சமரசம் செய்யும் அதிகாரிகளின் நியமனத்தினூடாக பரவலாக்கப்பட்டது. இத்துடன், ஆட்சேர்ப்பு செயல்முறையை கூடிய வினைத்திறனுள்ளதாக மேற்கொள்ளும் வகையில் முகவர்களை வசதிப்படுத்துவதற்கு இணையத்தை அடிப்படையாகக் கொண்ட ஆட்சேர்ப்பு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வழிமுறைகளூடாக புலம்பெயர்ந்த இலங்கைப் பணியாளர்களுக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்பின் நம்பத்தன்மை உறுதிப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**வெளிநாட்டைச் சேர்ந்த பணியாளர்களின் குடிவரவு இலங்கையின் தொழிற்சந்தையில் அண்மைக்கால போக்காக காணப்படுகிறது.** இது தொழிற்சந்தையில் கூலி அழுத்தத்தைத் தணிக்கும் அதேவேளை தொழில்சார் நிபுணர்கள் மற்றும் உயர் தேர்ச்சியடைய புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து பரந்துபட்ட அறிவு மற்றும் தொழில்நுட்ப வாய்ப்புக்களை வழங்குமென்பதால் இது ஒரு வரவேற்கத்தக்க விருத்தியாகும். எனினும், கீழ்நோக்கிய இடர்நேர்வு என்னவெனில், தொழிலாளர் புலம்பெயர்வானது தொழிலின்மை மீது மேல் நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தலாம். இப்பிரதிகூலம் தொழிலாளர் குடிவரவூடாக அடையப்பட்ட அதிகரித்த வாய்ப்புக்களின் நன்மைகள் மூலம் விஞ்சப்படலாம். இந்நன்மைகள், பல்வேறு அனுபவங்களைப் பகிர்தல், வெவ்வேறான கருத்துக்களைச் சேகரித்தல், நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் வேலைத் தலங்களில் புதிய வழிமுறைகளைக் கற்றல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இது உள்நாட்டுப் பணியாளர்கள் மற்றும் குடிவரவுப் பணியாளர்களுக்கிடையே சமூக மற்றும் கலாச்சார ஒத்துழைப்புக்கான வழிமுறைகளையும் திறந்து விடுகிறது.

## தொழிலாளர் உறவுகள் மற்றும் தொழிற்சந்தை சீர்திருத்தங்கள்

**தனியார் துறை கைத்தொழில்களில் வேலை நிறுத்தங்களின் மொத்த எண்ணிக்கை, வேலை நிறுத்தங்களில் பங்கேற்ற ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் இழக்கப்பட்ட மொத்த மனித நாட்கள் என்பன 2013இல் அதிகரித்தன.** தனியார் துறை கைத்தொழில்களில் இடம்பெற்ற வேலைநிறுத்தங்களின் மொத்த எண்ணிக்கை 2012இன் 34 இலிருந்து 2013இல் 42 இற்கு அதிகரித்தது. இந்த அதிகரிப்பு குறிப்பாக பெருந்தோட்டத் துறையில் பணி நிலைமைகள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளால் ஏற்பட்டதாகும். தனியார் துறையில் வேலை நிறுத்தங்களில் பங்கேற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 2012 உடன் ஒப்பிடுகையில் 2013இல் 12.3 சதவீதத்தால் அதிகரித்தது. இதன் விளைவாக, இழக்கப்பட்ட மனித நாட்களின் எண்ணிக்கை 2012 உடன் ஒப்பிடுகையில் 2013இல் இரு மடங்குக்கும் கூடுதலாக விளங்கியது.

**எனினும், தொடர்பான தரப்பினர்களிடையேயான பேச்சுவார்த்தைகளூடான சிறந்த கைத்தொழில் உறவுகள் காரணமாக 2013இல் தொழில் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது.** இதன்படி, 2013இல் தீர்மானங்களுக்காக திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்ட பிணக்குகள் 2012இல் அறிவிக்கப்பட்ட 3,702 முறைப்பாடுகளுடன் ஒப்பிடுகையில் 3,335 ஆக விளங்கியது. நடவடிக்கைகள் விரைவாக்கப்பட்டதன் காரணமாக அறிவிக்கப்பட்ட கைத்தொழில் பிணக்குகளில் கிட்டத்தட்ட 95 சதவீதம் இவ்வாண்டினுள்ளேயே திணைக்களத்தால் தீர்த்து வைக்கப்பட்டது. ஊழியர்கள், தொழில்தருநர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கிடையே ஒத்துழைப்பை அதிகரிக்கும் பொருட்டு தொழில் திணைக்களத்தால் நாடு தழுவிய சமூகப் பேச்சுவார்த்தை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

அட்டவணை 4.16 தனியார்துறைக் கைத்தொழில்களில் வேலை நிறுத்தங்கள்

| ஆண்டு | பெருந்தோட்டம் | | | ஏனையவை (அ) | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை |
| 2010 | 9 | 3,185 | 23,037 | 6 | 1,923 | 2,034 | 15 | 5,108 | 25,071 |
| 2011 | 19 | 6,692 | 23,513 | 8 | 3,807 | 15,673 | 27 | 11,039 | 39,186 |
| **2012** | **14** | **4,278** | **25,043** | **20** | **5,626** | **10,774** | **34** | **9,904** | **35,817** |
| 1ஆம் காலாண்டு | 8 | 1,991 | 5,743 | 12 | 4,330 | 5,959 | 20 | 6,321 | 11,702 |
| 2ஆம் காலாண்டு | 2 | 822 | 13,208 | 2 | 360 | 856 | 4 | 1,182 | 14,064 |
| 3ஆம் காலாண்டு | 1 | 835 | 1,670 | 2 | 287 | 2,541 | 3 | 1,122 | 4,211 |
| 4ஆம் காலாண்டு | 3 | 630 | 4,422 | 4 | 649 | 1,418 | 7 | 1,279 | 5,840 |
| **2013 (ஆ)** | **21** | **5,031** | **41,669** | **21** | **6,088** | **38,754** | **42** | **11,119** | **80,423** |
| 1ஆம் காலாண்டு | 4 | 416 | 1,046 | 7 | 2,505 | 21,381 | 11 | 2,921 | 22,427 |
| 2ஆம் காலாண்டு | 7 | 2,436 | 29,112 | 5 | 1,893 | 7,537 | 12 | 4,329 | 36,649 |
| 3ஆம் காலாண்டு | 5 | 1,490 | 9,134 | 2 | 498 | 3,208 | 7 | 1,988 | 12,342 |
| 4ஆம் காலாண்டு | 5 | 689 | 2,377 | 7 | 1,192 | 6,628 | 12 | 1,881 | 9,005 |

(அ) அரசசார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(ஆ) தற்காலிகமானது

மூலம் : தொழில் திணைக்களம்

**தொழில்புரியும் சூழலை தரமுயர்த்தும் பொருட்டு திணைக்களத்தால் நாடு பூராவும் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.** இந்நிகழ்ச்சித்திட்டங்கள் ஒவ்வொரு தனிப்பட்ட நிறுவனத்தின் அடிப்படையில் ஊழியர்கள், முகாமைத்துவ அலுவலர்கள் மற்றும் தொழிற்சங்கங்களிலிருந்தான பிரதிநிதிகளின் அனைத்து மட்டங்களிலும் கவனம் செலுத்திய செயலமர்வுகள் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்குகிறது. மேலும், அளவுக்கதிகமான ஏற்பாடுகள் மற்றும் தொழிற்பாட்டில் இல்லாத ஏற்பாடுகளை இரத்துச் செய்யும் பொருட்டு தொழில் திணைக்களம் 1923ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இந்திய குடிவரவு தொழிலாளர் கட்டளைச் சட்டத்தைத் திருத்த முன்மொழிந்துள்ளது.

## தொழிலாளர் உற்பத்தித்திறன்

**தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆளொருவருக்கான வெளியீடு (2002 விலைகள்) என அளவிடப்படும் தொழிலாளர் உற்பத்தித்திறன் 2013இல் அதிகரித்ததுடன் வேளாண்மைத் துறையில் ஆகக் கூடிய வளர்ச்சி அடையப்பட்டது.** ஒட்டுமொத்தமாக, தொழிலாளர் உற்பத்தித்திறன் 2013இல் 3.4 சதவீதத்தால் அதிகரித்து ஆளொருவருக்கு ரூ.388,005 ஐ அடைந்தது. வேளாண்மைத் துறையில் தொழிலாளர் உற்பத்தித்திறனிலான அதிகரிப்பு 6.7 சதவீதமாகும். இது இத்துறையில் ஊழியர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் உண்மை உற்பத்தியின் வளர்ச்சி இரண்டினதும் இணைந்த விளைவாகும். ஒட்டுமொத்த உற்பத்தித்திறனுக்கான ஆகக்கூடிய பங்களிப்பு கைத்தொழில் துறையிலிருந்து ஏற்பட்டது. இதன் விளைவாக, கைத்தொழில் துறையின் தொழிலாளர் உற்பத்தித்தின் 2013இல் 6.6 சதவீதத்தால் அதிகரித்தது. பணிகள் துறையின் உண்மை வெளியீடு 2012 உடன் ஒப்பிடுகையில் 2013இல் விரைவான வேகத்தில் அதிகரித்த போதிலும், இத்துறைக்கு புதிய ஊழியர்கள் நுழைந்ததால் 2013இல் தொழிலாளர் உற்பத்தித்திறன் 1.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

**நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவது தவிர்க்க முடியாததாகும்.** இது தொடர்பாக, இவ்வாண்டில் ஒட்டுமொத்த அடிப்படையில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதனூடாக உற்பத்தியை முன்னேற்றுவதற்கு அதிகாரிகள் பல முன்னெடுப்புக்களை எடுத்துள்ளனர். தொலைத் தொடர்பூட்டல், வீதி வலையமைப்பு, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் நிறுவப்பட்டு புதுப்பிக்கப்பட்டு மேலதிக விரிவாக்கத்துக்கான அடித்தளத்தை வழங்குகிறது. உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பல அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் நடத்தப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் கெய்சென், பசுமை உற்பத்தித்திறன் மற்றும் தரச் சுற்றுகள் போன்ற பல்வேறு உற்பத்தித்திறன் கருதுகோள்களை உள்ளடக்கியிருந்தது. மனித மூலதனத்தின் பயன்பாட்டை அதிகரிக்கும் குறிக்கோளுடன் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் தொழில்நிலை உருவாக்கம், மேம்பாடு மற்றும் தொழில் வழிகாட்டி என்பவற்றை இலக்கிடும் பல நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதுடன், இவை தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில் சந்தைகள் மற்றும் தொழிலுக்கமர்த்தக்கூடிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கியிருந்தன.

**அட்டவணை 4.17 முக்கிய பொருளாதாரத் துறைகளின்படி தொழிலாளர் உற்பத்தித்திறன்**

| | 2012 | 2013 (அ) |
|---|---|---|
| நிலையான விலைகளில் (2002) மொ.உ.உ ரூ.மில்லியன் | 3,045,288 | 3,266,099 |
| வேளாண்மை | 336,817 | 352,641 |
| கைத்தொழில் | 925,152 | 1,016,886 |
| பணிகள் | 1,783,318 | 1,896,572 |
| தொழிலாளர் உற்பத்தியாக்கம் ரூ.'000 தொழில் உள்ள ஆளுக்கு (ஆ) | 375.1 | 388.0 |
| வேளாண்மை | 132.0 | 140.8 |
| கைத்தொழில் | 433.3 | 461.8 |
| பணிகள் | 519.6 | 511.0 |

(அ) தற்காலிகமானது
(ஆ) தரவு எல்லா மாவட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**வேளாண்மைத் துறையிலான தொழிலாளர் உற்பத்தித்திறன் தொழிற்படையை வேளாண்மைத் துறையிலிருந்து ஏனைய துறைகளுக்கு உரிய வகையில் மீள்ஒதுக்குவதன் மூலம் அதிகரிக்கப்படலாம்.** உற்பத்தித்திறனிலான உயர் வளர்ச்சி காணப்பட்டமைக்கிடையிலும் வேளாண்மைத் துறையிலான தொழிலாளர் உற்பத்தித்திறனானது பொருளாதாரத்தின் ஏனைய இரு பெரும் துறைகளில் காணப்படுவதை விட குறிப்பிடத்தக்களவிற்கு குறைவாகக் காணப்பட்டது. தற்போது, வேளாண்மைத் துறை தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்களின் மொத்த எண்ணிக்கையின் இரண்டாவது மிகப் பெரிய பங்குக்கு வகைகூறிய போதிலும் ஒட்டுமொத்த மொ.உ.உற்பத்திக்கான இதன் பங்களிப்பு 10.8 சதவீதமாக மட்டுமே விளங்கி குறைந்த மட்டத்திலான தொழிலாளர் உற்பத்தித்திறனைப் பிரதிபலித்தது. வளப் பயன்பாட்டிலான இவ்வமைப்பு ரீதியிலான குறைபாடானது அதிகரித்த பொறிமுறையாக்கல் மற்றும் பொருத்தமான கல்வி மற்றும் பயிற்சியூடாக மேலதிக தொழிற்படையை வேளாண்மைத் துறையிலிருந்து கூடிய உற்பத்தித்திறன் வாய்ந்த கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளுக்கு நெறிப்படுத்தல் மூலம் தீர்த்து வைக்கப்பட வேண்டியுள்ளது. இது தொடர்பாக, வேளாண்மை அமைச்சு சிறந்த நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கு பல்வேறு தகவல் மற்றும் அறிவு பரப்பும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் சுற்றாடலைப் பாதுகாக்கும் அதேவேளை உயர் தரமான விதைகள், வளமாக்கி, பொறி மற்றும் கிருமிநாசினிகளின் பயனுறுதியான பயன்பாட்டில் பெரும்பாலும் கவனம் செலுத்தியது. நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம், காணிப் பயன்பாடு மற்றும் மண் பாதுகாப்புக் கொள்கைகளும் நடைமுறையிலிருந்தன. வேளாண்மைத் துறையில் புதிய தொழில்நுட்பங்கள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் கல்வி தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களும் இத்துறையில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் முக்கிய பங்கை வகிக்கின்றன. எனினும், அறுவடைக்குப் பின்னரான பொருட் சேதத்தை குறைத்தல் தொடர்பாக பல பிரச்சனைகள் காணப்படுகின்றன. பயனுறுதிமிக்க போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் முறைகள், பண்ணை மட்டத்தில் வேளாண்மைப் பொருட்களுக்கான பெறுமதிகூட்டல் மற்றும் பண்ணை உற்பத்திகளின் விற்பனைகளை ஊக்குவிப்பதற்கான சந்தைப்படுத்தல் பொறிமுறைகள் பழுதடையக்கூடிய பொருட்களின் சேதத்தையும் மற்றும் வேளாண்மைப் பொருட்களுக்கான சேதத்தையும் குறையச் செய்யும்.

**முன்னேற்றமடைந்த தொடர்பூட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற தொழிற்படையின் அதிகரித்த கிடைப்பனவுடன் பணிகள் துறையில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு மேலதிக உள்ளார்ந்த வளம் காணப்படுகிறது.** தற்போதைய உலகப் பொருளாதாரச் சூழல் மற்றும் நடைமுறையிலுள்ள 5+1 என்ற உள்நாட்டு உபாயம் என்பவற்றுடன் நாட்டின் பணிகள் துறை மேம்படுவதற்கும் பன்னாட்டு முதலீட்டாளர்களைக் கவர்வதற்குமான உள்ளார்ந்த வளத்தைக் கொண்டுள்ளது. தொழிற்படையின் அறிவு மற்றும் தேர்ச்சியைத் தொடர்ந்து தரமுயர்த்துவதன் மூலம் பன்னாட்டுத் தேவைப்பாடுகளின்படி பொருத்தமான செயல்முறை நியமம் அடையப்பட்டால் பணிகள் துறையில் உற்பத்தித்திறன் மற்றும் வளர்ச்சியை மேலும் முன்னேற்றலாம். வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர் குடிவரவு என்பன தகவல் மற்றும் தொழில்நுட்பத்தின் நிறைந்த நன்மைகளுக்கு வசதிப்படுத்துவதுடன் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலுமான உற்பத்தித்திறன் மட்டங்களை தரமுயர்த்தும்.